பக்கங்கள்: 12+IV= பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 14 புதன்கிழமை (26-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்:92

# மண்ணில் உருவாகியிருக்கும் புதிய சூழ்நிலை விடுதலைப் போருக்குக் கிடைத்த அங்கீகாரம்!

## எழுச்சிப் பேராளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன்

பளை,பெப்.26

எமது மண்ணில் இன்று ஏற்பட்டிருக்கும் புதிய சூழ்நிலை தமிழ் இனத்தின் - தமிழ்த் தேசத்தின் - நீண்ட - அர்ப்பணிப்பு மிக்க விடுதலைப் போராட்டத்துக்கு கிடைத்துள்ள பெரிய அங்கீகாரம் ஆகும்.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

பளை மத்திய கல்லூரியில் நேற்று முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான தமிழீழ எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாட்டில் சு.ப.தமிழ்ச்செல்வன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மாவீரர்களான அற்புதன், சோதியா ஆகியோரின் தந்தையார் முதன்மைச் சுடரேற்றி மாநாட்டைத் தொடக்கி வைத்தார்.

தேசியக் கொடியை தமிழ்ச்செல்வன் ஏற்றினார். அதன்பின்னர் அங்கு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களின் பாதுகாப்பு அரண் விடுதலைப் புலிகளேயாவர். 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளம் தலைமுறையை - சகோதர சகோதரிகளை



- நாங்கள் இந்தத் தேச விடுதலைக்காக, எங்கள் அரசியல் உரிமைகளைப் [illegible]

(11ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம் வருகையோடு அடுத்த பத்து நாள்களுக்கு

# இராஜதந்திர நடவடிக்கைகள் வன்னியில் மும்முரமாக நடக்கும்

## ஜப்பான் பேச்சுக்கு முன்னோடியாக

லண்டன்,பெப்ரவரி26

**விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனிலிருந்து அடுத்த ஞாயிற்றுக்கிழமை வன்னி வருகின்றார். அதைத் தொடர்ந்து அடுத்த பத்து நாள்களுக்கு வன்னியில் இராஜதந்திரச் செயற்பாடுகள், நடவடிக்கைகள், சந்திப்புகள் மும்முரமாக நடக்கவிருக்கின்றன.**

**அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஜப்பானில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் ஆறாவது கட்டச் சமாதானப் பேச்சுகளுக்கு முன்னோடி நடவடிக்கையாகவே இந்த இராஜதந்திர செயற்பாடுகள் இடம்பெறவிருக்கின்றன.**

அன்ரன் பாலசிங்கம் தனது துணைவியார் அடேல் பாலசிங்கம் சகிதம் ஞாயிற்றுக்கிழமையன்று லண்டனிலிருந்து கொழும்பு ஊடாக வன்னிக்கு வருகின்றார்.

அவர் லண்டனிலிருந்து புறப்பட முன்னர் அங்கு நோர்வே அரசின் பிரதிநிதிகளையும் சில முக்கிய இராஜதந்திரிகளையும் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகின்றது.

அன்ரன் பாலசிங்கம் வன்னி வந்து சேர்ந்ததும் அவர் சகிதம் பன்னாட்டு இராஜதந்திரிகளை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேரடியாகச் சந்தித்து விரிவாகப் பேச்சுக்களில் ஈடுபடுவார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. கையளித்த பிஸ்டல்களை பகுப்பாய்வு செய்ய நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம்,பெப்.26

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பாக இராணுவத் தலைமையகத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 9 மி.மீற்றர் கைத்துப்பாக்கிகள் ஐந்தையும் உடனடியாக இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றத்தில் இடம்பெற்ற சமயம் இராணுவத்தலைமையகத்திடம் இருந்து பெறப்பட்ட 9.மி.மீ.கைத்துப்பாக்கிகள் ஐந்தை குற்றத்தடுப்புப் பொலீஸ் அதிகாரி ரஞ்சித் டி சில்வா மன்றில் சமர்ப்பித்தார்.

ஈ.பி.டி.பி.யினரால் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட இந்தக் கைத்துப்பாக்கிகளை நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய இராணுவத் தலைமையகத்திடம் இருந்து தாம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் -

இந்தத் துப்பாக்கிகளை இரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிடவேண்டும் என்றும் -

ரஞ்சித் டி சில்வா நீதிவானிடம் கோரினார்.

இதனையடுத்து -

நிமலராஜன் கொலைச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து மீட்கப்பட்ட ரவைகள் குறிப்பிட்ட இந்த கைத்துப்பாக்கிகளில் இருந்து ஏவப்

(11ஆம் பக்கம் பார்க்க)

## நமது வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றும் நிலைக்கு வளர வேண்டும்

### பெரு விளையாட்டு விழா நிறைவில் பாப்பா உரை

கிளிநொச்சி,பெப்.26

தமிழீழ மண்ணில் உள்ள வீர வீராங்கனைகள் அனைவரும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றக்கூடியவாறு வளர்த்தெடுக்கப்பட வேண்டும் அதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவோம்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்



பாப்பா.

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் கிளிநொச்சியில் நடத்தப்பட்டு வந்த 2ஆவது தமிழீழத் தேசியப் பெருவிழாவின் இறுதியாட்டமும் பரிசளிப்பு வைபவமும் நேற்று கிளிநொச்சி விளையாட்டரங்கில் இடம்பெற்றன. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய

(11ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழு தலைவர் அடுத்த வாரம் பிரபாவை சந்திப்பார்

கொழும்பு,பெப்.26

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் றகி ரெவிபன் அடுத்த மாதம் முதல்வாரத்தில் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

அடுத்த மாதம் 7ஆம் திகதி பதவியேற்பதற்கு முன்பாக அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேஜர் ஜெனரல் றகி ரெவிபன் கடந்த வாரம் கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்தார்.

கண்காணிப்புக் குழுவின் மாவட்ட தலைவர்களோடு தற்போது அவர் பேச்சு நடத்திவருகிறார்.

எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் வன்னிக்கு விஜயம் செய்யும்போது அவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்தித்துப் பேசுவார். (ஐ-ரி)

### திருக்கேதீஸ்வரம் செல்ல வசதியாக

## அடம்பன் வீதியை திறக்க கோரிக்கை!

கிளிநொச்சி,பெப்.26

சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பதற்காக பக்தர்கள் திருக்கேதீஸ்வரத்துக்கு செல்வதற்கு அடம்பன் வீதியைத் திறக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு படைத்தரப்பு இதுவரை இணங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டிலிருந்தும், வன்னிப் பகுதியிலிருந்தும் செல்லவுள்ள பக்தர்கள் ஏ-9 வீதி ஊடாக வவுனியா சென்று பின்னர் அங்கிருந்து மன்னார் பாதையூடாகவே திருக்கேதீஸ்வரத்துக்குச் செல்லமுடியும்.

இதனால் ஏற்படும் தாமதங்கள், அலைச்சல்களைத் தவிர்ப்பதற்காக மாங்குளம் - மடு ஊடாக - அடம்பன் வீதி வழியே மக்கள் செல்ல வசதியாக அடம்பன் வீதியைத் திறக்க வேண்டும் என்று மன்னார் அரச அதிபர் படை அதிகாரிகளைக் கேட்டிருந்தார்.

இக்கோரிக்கைக்கு நேற்று வரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-3-ரி)

## யாழ்.படைகளின் தளபதி ஆயர்களைச் சந்தித்தார்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள தென்னிலங்கை ஆயர்களை யாழ்.மாவட்ட படைகளின் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கொழும்பு மறைமாவட்ட ஆயர் அதிவண ஒஸ்வால்ட் கோமிஸ், குருநாகல் மறைமாவட்ட ஆயர் ரேமண்ட் பீரிஸ் ஆகியோரையே தளபதி சந்தித்தார். யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகமும் இச்சந்திப்பில் உடனிருந்தார்.

யாழ்.ஆயர் இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு படையினர் பூரண ஆதரவு வழங்க வேண்டும் என்று ஆயர்கள், தளபதி பொன்சேகாவிடம் தெரிவித்தனர். (ஐ-3-5)

### அநுராதபுரத்தில் தீ அனர்த்தம்

அநுராதபுரம் நகரில் வங்கிகள் அமைந்துள்ள பகுதியில் - கடைத்தொகுதி ஒன்றில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தில் 5கடைகள் எரிந்து நாசமாகின; ஒருவர் உடல்

(11ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நாவாந்துறையில் நேற்று....



பான்ட் வாத்தியங்கள் சகிதம் ஆயர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.



கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதி.வண ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகையும், யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் கொடிகளை ஏற்றுகின்றனர்.



கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதி.வண ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை நாவாந்துறை யோசவ்வாஸ் யாத்திரை ஸ்தலத்தினை நாடாவை வெட்டித் திறந்து வைக்கிறார்.



கண்டி மறைமாவட்ட ஆயர் வியான்னி பெர்னான்டோ தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகிறது. இரு மருங்கிலும் கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதிவண ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகையும் யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் காணப்படுகின்றனர். *(படங்கள்:ரமணன்)*

## யோசவ் வாஸ் அடிகளாரின் யாத்திரை ஸ்தலம் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

இலங்கையின் அப்போஸ்தலர் முத்திப்பேறு பெற்ற யோசவ்வாஸ் அடிகளின் கொட்டடி, நாவாந்துறை யாத்திரை ஸ்தலம், நேற்று மாலை 5 மணியளவில் கொழும்பு மறைமாவட்ட பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகையால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கண்டி ஆயர் வியான்னி பெர்னான்டோ ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருநாள் கூட்டுத் திருப்பலியில் யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களில் இருந்து வந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

இத்திருப்பலியில் தென்பகுதியிலிருந்து வருகைதந்த கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் மேரியன் பீரிஸ ஆண்டகை, பதுளை மறைமாவட்ட ஆயர் வின்ஸ்ரன் பெர்னான்டோ ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் எல்மோ பெரேரா ஆண்டகை, திருமலை மட்டுநகர் மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, சிலாபம் மறைமாவட்ட ஆயர் பிராங் மார்க்கஸ் ஆண்டகை, குருநாகல் மறை மாவட்ட ஆயர் ரேமண்ட் பீரிஸ் ஆண்டகை ஆகியோருடன் யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மற்றும் யாழ்குடாநாட்டைச் சேர்ந்த பங்குத் தந்தையர்கள், அருட்தந்தையர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

## பொதுசன தொடர்பு அதிகாரி ராஜினாமா

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் பொதுசன தொடர்பு அதிகாரி யு.எல்.உவைஸ், தனது பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடகச் செயலாளர் ஹில்மி முஹம்மது தெரிவித்துள்ளார். உவைஸ், அக்கரைப்பற்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுச் செயலாளரும் அக்கரைப்பற்று பிரதேச சபையின் பிரதி தவிசாளருமாவார். (ஐ)

### ஊழியர்கள் போராட்டத்தில் குதிப்பு

## வலி.தெற்கு பிரதேச சபையின் நாளாந்த பணி ஸ்தம்பிதம்

வலி.தெற்கு,பெப்.26

வலி.தெற்கு பிரதேச சபைச் செயலரை இடமாற்றம் செய்யும்படி கோரி சபையின் ஊழியர்கள் மறியல் போராட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

பிரதேச சபைச் செயலரின் செயற்பாடுகளையும் பாரபட்ச நடவடிக்கைகளையும் கண்டித்து இந்த மறியல் போராட்டம் நடத்தப்பட்டது என்று சபை ஊழியர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

செயலரை இடமாற்றும் வரை தமது போராட்டம் தொடரும் என்றும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மறியல் போராட்டம் காரணமாக சபையின் செயற்பாடுகள் நேற்று ஸ்தம்பித்தன.

(ஐ-86-152-175)

## தாய்லாந்து பிரஜைகள் கைது

கொழும்பு,பெப்.26

மாணிக்கக் கற்களை விழுங்கி, கட்டுநாயக்கா விமான நிலையத்தினூடாக பாங்கொக் செல்ல முயன்ற தாய்லாந்து பிரஜைகள் இருவரை நேற்று முன்தினம் விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகள் கைதுசெய்தனர்.

தாய்லாந்து விமானமொன்றில் பாங்கொக் செல்வதற்காக இவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்றுள்ளனர். (ஐ)

### வலிகாமம் வடக்குப்பகுதி

## பிரதேச சபைச் செயலாளரை அலுவலகத்துக்குள் பூட்டிய ஊழியர்!

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் செயலாளர் நேற்றுமுன்தினம் தனது பணி முடிவடைந்து அலுவலகத்திலிருந்து புறப்பட்டபோது, அவரை வெளியே செல்லவிடாது ஊழியர்கள சிலர் கதவை மூடித்தடுத்தனர்.

கடந்த பதினொரு மாதங்களாக தமக்கு சம்பளம் வழங்கப்படாதுள்ளதாகவும் - அதனை வழங்கும்படியும் வலியுறுத்தியே இந்தத் தடுப்பு நடவடிக்கையில் ஏழு ஊழியர்கள் ஈடுபட்டனர்.

அலுவலகப் பணிகள் முடிவடையும் சமயம் பார்த்து அங்கு வந்த இந்த ஊழியர்கள், செயலாளரை அலுவலகத்துக்குள் வைத்துக் கதவைப் பூட்டிவிட்டு வாசலில் அமர்ந்து கொண்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த சுன்னாகம் பொலீஸார், சம்பந்தப்பட்டவர்களை பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணையின் முடிவில் மேற்படி விவகாரத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும், அதுவரை வீண்பிரச்சினைகளை உருவாக்காது இருக்கும்படியும் பொலீஸார் அறிவுறுத்தல் வழங்கினர் என்று கூறப்படுகிறது. (ஒ-86)

## அதாவுல்லா அணியினருக்கு நேற்று நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,பெப்.26

போக்குவரத்து அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையிலான அணியினர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பெயரில் நடவடிக்கைகளில் ஈடுபடவோ அல்லது கட்சியின் பதவிகளை வகிக்கவோ கொழும்பு கோட்டை நீதிவான் மாலனி குணரத்ன மனு விசாரணை முடியும் வரை நிரந்தரத் தடை விதித்தார். நேற்று அவர் இந்தத் தடை உத்தரவை விதித்தார்.

இதுவரை தற்காலிகத் தடையே விதிக்கப்பட்டுவந்தது. இப்போதுதான் மனு விசாரணை முடியும்வரை நிரந்தரத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இத்தடைக்கு எதிராக எதுவும் தெரிவிக்கவேண்டியிருந்தால் எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் அதாவுல்லா அணியினருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அதாவுல்லா அணியினர், முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடத்தைக்கூட்டி உயர்பதவிகளுக்கு மேற்கொண்ட நியமனங்கள் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கும்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையிலேயே நேற்று இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இம்மனு ஏற்கனவே பல தடவைகள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது அதாவுல்லா அணியினர், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்களாகச் செயற்பட நீதிவான் இடைக்கால தடையுத்தரவை விதித்திருந்தார்.

வழக்கு விசாரணையின் கடந்த தவணையின்போது இரு தரப்பினரும் இம்மனு தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணங்களைச் சமர்ப்பித்திருந்தனர். இச்சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிவான் நேற்று தனது தீர்ப்பை வழங்கினார்.

முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடத்தில் தலைவர்களாக அதாவுல்லா அணியினர் செயற்பட இரு வாரங்களுக்கு ஒரு தடவை இடைக்கால தடை விதித்து வந்த கோட்டை நீதிவான், மனு மீதான விசாரணை முடியும் வரை அத்தடை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் தீர்ப்பளித்தார். (ஐ)

## இலங்கைக்கு வழங்கிய கடன்களில் ரூ.110 கோடியை நெதர்லாந்து ரத்து

கொழும்பு,பெப்.26

இலங்கைக்கு கட்டம் கட்டமாக வழங்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்களில் 110கோடி ரூபாவை ரத்துச் செய்வதென நெதர்லாந்து தீர்மானித்திருக்கிறது.

இதன்படி சுற்றாடல் பாதுகாப்பு, புனர்வாழ்வு போன்றவற்றுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீளத் திரும்பச் செலுத்தப்படமாட்டா.

கடன்களை ரத்துச் செய்திருக்கும் நெதர்லாந்து இந்த ஆண்டில் இலங்கைக்கு 270கோடி ரூபா வழங்க முன்வந்திருக்கிறது என்று பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

அரசாங்கம் பெற்றுக் கொண்டிருக்கும் நீண்டகால அபிவிருத்திக் கடன்கள் ரத்துச் செய்யப்பட சம்பந்தப்பட்ட நாடுகளுடன் அமைச்சர் மிலிந்த மொறகொட நடவடிக்கை எடுத்துவருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## நவீல்ட் பாடசாலை வெள்ளியன்று திறப்பு

கொழும்புத்துறை,பெப்.26

கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாக பலத்த சேதம் அடைந்த கைதடி நவீல்ட் பாடசாலை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

பாடசாலையின் வழமையான கல்விச் செயற்பாடுகள் அடுத்த மாதம் 9 ஆம் திகதியே ஆரம்பிக்கப்படும் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் கைதடியிலிருந்து இடம் பெயர்ந்த இந்தப் பாடசாலை சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது. (ஐ-30)

## மட்டக்களப்பில் திட்டக் குழு ஆராய்வு

காத்தான்குடி,பெப்.26

யுத்தத்தினால் அழிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் புனரமைக்கும் ஜப்பானிய அரசின் 'ஜெய்கா' திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திலும் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது குறித்து ஆராயவென 'ஜெய்கா' திட்ட உயர்மட்ட குழுவினர் கடந்த திங்கள் நண்பகல் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயஞ்செய்தனர்.

'ஜெய்கா' திட்டப் பிரதிப் பணிப்பாளர் உமன்கா சடோஸ் தலைமையிலான இக்குழுவினர் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் இ.மோன குருசாமியைச் சந்தித்து இருமணி நேரம் பேச்சு நடத்தினர்.

கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம், மீன்பிடி உட்பட பலதுறைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும், தற்போதைய சூழ்நிலை தொடர்பாகவும் அரசாங்க அதிபர், குழுவினருக்கு எடுத்து விளக்கினார். (ஐ)

## பல்கலை ஊழியர்கள் இன்று அடையாள வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.26

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

பல்கலைக் கழக ஊழியர்களின், பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட பல கோரிக்கைகளுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று அடையாள வேலைநிறுத்தம் இடம்பெறும் என்றும் -

எதிர்வரும் 3ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக வேலைநிறுத்தம் இடம்பெறும் என்றும் -

சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-3)

## உள்ளூராட்சி அமைப்புகளில் அரசியல் நியமன சிக்கல்கள்

குடாநாட்டில் உள்ளூராட்சி அமைப்புகளில் பதவிக்காலம் காலாவதியாகிய பின்னர் அந்த அமைப்புகளில் சிலவற்றில் புதிய பிரச்சினைகள் உருவாகிவருகின்றன என்று கூறப்படுகிறது.

கடந்த காலத்தில் பிரதேச சபைகளில் செல்வாக்குச் செலுத்திய அரசியல் கட்சிகள் தமது ஆதரவாளர்களுக்கு விதிமுறைகளை மீறி நியமனங்களை வழங்கியதாகக் கூறப்படுகிறது.

உள்ளூராட்சி அமைப்புகள் பதவியில் இருந்தபோது இத்தகைய ஊழியர்கள் கொடுப்பனவுகள் உட்பட எந்த விடயத்திலும் இடையூறுகள் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், தற்போது உள்ளூராட்சி அமைப்புகளின் பதவிக்காலம் காலாவதியாகிவிட்டது. இதனால் அவற்றின் நிர்வாகப் பொறுப்புகளை அந்தந்த உள்ளூராட்சி அமைப்புகளின் செயலாளர்களே ஏற்றுள்ளனர்.

இந்த நிலையில் முன்னர் விதிமுறைகளை உதாசீனப்படுத்தி அரசியல் செல்வாக்கால் நியமனம் செய்யப்பட்ட ஊழியர்கள், தற்போது அலுவலக விதிமுறைகளின் அடிப்படையில சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

சிக்கலிலிருந்து தப்பிக்க அவர்கள் மீண்டும் அரசியல்கட்சிகளை தஞ்சமடைந்திருக்கின்றனர் என்றும் -

இதனால், சில உள்ளூராட்சி அமைப்புகளில் பிரச்சினைகள் உருவாகி வருவதாகவும் கூறப்படுகிறது.

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK

175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS


SHARP

உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

# மேன்முறையீடு குறித்து வோர்ன் மீள்பரிசீலனை

தன்மீது விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்வது என்ற முடிவை மறுபரிசீலனை செய்யப் போவதாக ஷேன் வோர்ன் அறிவித்துள்ளார்.



வோர்ன் மீதான போதை மருந்து குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தியது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஊக்கமருந்து ஆணைக்குழு அவருக்கு ஓராண்டு தடையை விதித்தது. இந்தத் தடையை எதிர்த்து மேன் முறையீடு செய்யப்போவதாக அவர் அறிவித்திருந்தார்.

ஆனால், இந்த முறையீட்டால் அடுத்த இரண்டுவார காலத்திற்கு ஏறபடும் மனஉளைச்சல், கவலை போன்ற பிரச்சினைகளை கருத்திற்கொண்டு முறையீடு பற்றிய தனது முடிவை மறுபரிசீலனை செய்யப்போவதாக வோர்ன் கூறியுள்ளார்.

மனஉளைச்சல், கவலை இந்த காரண காரியங்களை குறிப்பிட்டிருந்தாலும் இந்த ஓராண்டு காலத்தடையுடன் இந்தப்பிரச்சினையை முடித்துக்கொள்ள வோர்ன் விரும்புகிறார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

"மேன் முறையீடு குறித்து நன்றாக யோசனை செய்து சிந்தித்து முடிவு எடுக்கவுள்ளேன். ஏனெனில், இதற்கு ஒருவாரகால அவகாசம் உள்ளது.

"தடைபற்றிய விஷயத்தில் எனக்கு கோபமும், வருத்தமும் உள்ளது. ஆனால், தெளிவான முடிவு எடுக்கும் நிலையில் நான் உள்ளேன்".

- என்று வோர்ன் கூறியுள்ளார்.




SHARP Action of the day



பாகிஸ்தான் வீரர் ரஸித் லத்தீப் நெதர்லாந்து வீரரின் பந்தை விளாசுகிறார்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

# 500 விக்கெட்டுகள் வீழ்த்தி வஸிம் சாதனை

பேர்ள்,பெப்.26

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் வஸிம் அக்ரம் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 500 விக்கெட்டுகளைக் கைப்பற்றி சாதனை புரிந்துள்ளார்.

நேற்று நெதர்லாந்துக்கெதிராக பேர்ளில் நடைபெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்து வீரர் ஜைக் எப்டம் என்பவரை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் இந்தச் சாதனையை அவர் நிலைநாட்டினார்.



கடந்த சனிக்கிழமை இங்கிலாந்

(11ஆம் பக்கம் பார்க்க)

# உலகக்கிண்ண துளிகள்

## ஐ.சி.சி.தலைவருக்கு அதிர்ச்சி

சர்வதேச கிரிக்கட் கவுன்ஸிலின் தலைவர் மல்கம் கிறே, இலங்கை - கனடா அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண போட்டியை பார்வையிடச் சென்றபோது அதிர்ச்சியுற்றார்.

மைதானத்தை மல்கம் கிறே நெருங்கியபோது போட்டிமுடிவடைந்து ஊடகவியலாளர்கள் சிலரும் தொலைத் தொடர்பு ஊழியர்கள் சிலரும் அரங்கிலிருந்து வெளியேறுவதையே அவர் காணமுடிந்தது.

கடந்த புதனன்று பேர்ள் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கனேடிய அணியை 36 ஓட்டங்களுடன் வீழ்த்தியது இலங்கை. இதனால் 24ஓவர்களில் போட்டி முடிவுற்றமை குறிப்பிடத்தக்கது.

கென்ய - நியூசிலாந்து போட்டி தொடர்பாக தொலைபேசி மூலமான மாநாடொன்று முடிவுற்றபின் இப்போட்டியைக்காண வந்தார் மல்கம் கிறே.

"மதிய உணவு இடைவேளையின் பின் போட்டியைக்கண்டு களிக்கலாம் என்று எண்ணினேன்" என்று கூறிய கிறே "என்ன நடந்தது? யார் விக்கெட்டுக்களை வீழ்த்தினார்?" என்று கேட்டறிந்தார்.

## மனைவியின் மகிழ்ச்சி

நமீபியாவுக்கு எதிராக இந்திய அணித்தலைவர் கங்குலி சதம் அடித்ததில் அவரது மனைவி டோனாவுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. இச்சதத்தினால் தங்கள் குடும்பமே குதூகலம் அடைந்துள்ளது என்று கூறிய டோனா, கங்குலியுடன் தொலைபேசியில் பேசியதாகவும் தெரிவித்தார்.

## 2000 ஓட்டங்களைக் கடந்தார் ஸ்ரீக்

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஸிம்பாப்வே வீரர் ஸ்ரீக் ஆட்டம் இழக்காமல் 28 ஓட்டங்களை எடுத்தார். அவர் 13 ஓட்டங்களைத் தொட்டபோது ஒரு நாள் போட்டிகளில் 2000 ஓட்டங்களை எடுத்தார். (ம-5)

# 'சுப்பர் சிக்ஸ்' செல்வது யார்?

டேர்பன்,பெப்.26

இந்திய - இங்கிலாந்து மோதல் இன்று 'சுப்பர் சிக்ஸுக்கு யார் செல்வது என்ற மிக முக்கியமான கட்டத்தில் நின்றுகொண்டிருக்கின்றன. இரு அணிகளுக்கும் யார் ஒருவர் தோற்றாலும் அணி வெளியே என்கிற இக்கட்டுக்கு.

குழு 'ஏ' இல் இவ்விரு அணிகளும் தலா 12 புள்ளிகளைப் பெற்று சமனிலையில் இருக்கின்றன. இங்கிலாந்து அணி சிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் பங்குபற்றாததினால் அநியாயமாக 4 புள்ளிகளை இழந்தது. இந்தத் தொடரில் தொடர்ந்து இருப்பதற்கு இன்று வென்றாகவேண்டும் அது.

இங்கிலாந்து கடைசியில் சந்திக்கப்போவது ஆஸ்திரேலியாவை. அண்மைக்கால பெறுபேறுகளின் அடிப்படையில் ஆஸி. அணியை இங்கிலாந்து வெல்லுமா என்பது சந்தேகம்தான். எனவே இன்று எப்பாடுபட்டாவது வென்றாகவேண்டும் என்பது ஹுசைனுக்கு உள்ள பெரும் அழுத்தம்.

பாகிஸ்தான் அணியை தோற்கடித்துப் பெற்ற பெருவெற்றி இங்கிலாந்தின் மனோதிடத்தை அதிகரித்திருக்கும். பாகிஸ்தான் ஆட்டத்தில் அசத்திய அன்டர்ஸன், இந்தியாவுக்கு எதிரான ஹுசைனின் முக்கிய துருப்புச் சீட்டு.

இங்கிலாந்தின் முன்னணி துடுப்பாட்ட வீரரான மைக்கல் வோகன் தசைப்பிடிப்புக்கு உள்ளாகி இருந்தார். இருந்தபோதிலும் இன்றைய ஆட்டத்தில் அவர் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் பலம்வாய்ந்த துடுப்பாட்ட வரிசையை அன்டர்ஸன் தகர்த்தாக வேண்டும். அந்த இளைஞனின் தோள்களில் பெரும்சுமை இருக்கிறது.

இந்தியர்களுக்குப் பலம் அவர்களின் துடுப்பாட்ட வரிசை. அவர்களுக்கும் இது முக்கியமான ஆட்டம் இன்று வென்றுவிட்டால் பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் இலகுவாக 'ரிலாக்ஸாக' மோதலாம். இல்லையேல் இந்தியர்கள் நிலை சிக்கலாகும். சச்சின் தலை

(11ஆம் பக்கம் பார்க்க)



கடற்கரையில் பொழுதை கழிக்கும் இந்திய அணி வீரர்கள்

# இங்கிலாந்துக்கு எதிரான தோல்வி மிக மோசமானவற்றுள் ஒன்று!

## பாகிஸ்தான் அணித்தலைவர் தெரிவிப்பு

கேப்டவுன்,பெப்.26

இங்கிலாந்துக்கு எதிரான தோல்வி, பாகிஸ்தான் இதுவரையில் சந்தித்த தோல்விகளுள் மிக மோசமான ஒன்று என்று பாகிஸ்தான் அணித் தலைவர் வக்கார் யூனுஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சனியன்று நடைபெற்ற இங்கிலாந்துடனான ஆட்டம் பற்றி செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்கிலாந்து 250 இற்கும் குறைவான ஓட்டங்களை எடுக்கும் அளவுக்கு எமது பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டார்கள். ஆனால், துடுப்பாளர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

1992இலும் நாம் இப்படிப்பட்ட தோல்விகளைச் சந்தித்தபோதும் இறுதியில் கிண்ணத்தை வென்றோம் என்பதை இங்கு நினைவுகூர விரும்புகின்றேன்.



(11ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
Expo Aviation (Pvt) Ltd
1ச, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666


ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

## இதய அஞ்சலி



**அமரர் கா.சந்திரராசா (SLAS)**

(பிரதேச செயலர்)

*பொன்னாலையின் பொதிகைத் தென்றல் - மனங்கவர்*
*பொங்கிவரும் அன்பு ஊற்று*
*பொன்னான பணிசெய்யும் திருவிளக்கு - ஐயா*
*பொறுமை இழந்து தவிக்கின்றோம்!*

வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை, பொன்னாலை. (14941) — **அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 10 - 1937



மறைவு 13 - 02 - 1988

### அமரர் தி.சி.சண்முகலிங்கம்

*(இணுவில் கிழக்கு)*

திதி: 26.02.2003

*ஊர் பலதுக்கும் உயர் தொண்டாற்றி*
*சீர் சிறப்புடன் திகழ்ந்த குடும்பக் கலசமே அப்பா!*
*விதி வசத்தால் எம்மைவிட்டு வியனுலகம் சென்றீரே!*
*மேதினியில் உங்கள் புகழ் காத்து கல்விக் கருவியால்*
*அதியுயர் நிலை அடைந்தனர் உம் மக்கட் செல்வங்கள்!*
*பதினைந்து ஆண்டுகள் போயினும் எம்*
*கண்ணீர் மட்டும் காயவில்லையே!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய
சிவகாமியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"சுகந்தம்",*
*இணுவில் கிழக்கு, இணுவில்.*


அன்பான மனைவி,
பிள்ளைகள், சுற்றத்தார்.

(14866)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 1929 - 08 - 05



உதிர்வு 2003 - 01 - 27

### அமரர் வைத்திலிங்கம் நாகரத்தினம்

*அப்பா! அப்பா!! என்று கதறுகின்றோம் உங்கள்*
*செவிதனில் கேட்கவில்லையா? அப்பா! நாம்*
*பாவிகளாய் இருந்து பரிதவிக்கின்றோம் அப்பா!*
*ஒரு கூண்டில் வாழ்ந்த எம்மைவிட்டு - எங்கு*
*தான் சென்றீர்கள் அப்பா?*

இன்று (26.02.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கரணவாய் மேற்கு,*
*கரவெட்டி.* (14945)

- அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### வயிரவி சின்னத்தம்பி

இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவி சின்னத்தம்பி நேற்று (25.02.2003) செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் லட்சுமி, பாக்கியம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வல்லிபுரம் (முன்னாள் சாரதி, இ.போ.ச.), காலஞ்சென்ற சின்னக்கண்டு (முன்னாள் நடத்துநர், இ.போ.ச.) ஆகியோரின் மைத்துனரும் மகேஸ்வரி (வவுனியா), தெய்வேந்திரம் (கனடா), சத்தியபாமா (கனடா), தேவேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரஞ்சோதி (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), பிறேமராணி (கனடா), கிருபாகரன் (கனடா), இந்திராணி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஜனந்தன், சஞ்சயன், துமாரகன், கிருசாலினி, நிரோசன், தில்லானா, சாதனா, தர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் சுமந்திரன் (கணக்காளர், புனர்வாழ்வுத் திணைக்களம், கொழும்பு), இந்திராணி (சிறீலங்கா ரெலிகொம், கல்கிசை), சந்திரவதனா (கொழும்பு), வசந்தா, விஜயா (கனடா), சியாமளா ஆகியோரின் பாசமிகு தாய்மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.03.2003 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஈஸ்வரி வாசம்",*
*சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய்.* (14946)

தகவல்:
த.வல்லிபுரம் (மைத்துனர்)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் நாளைமறுதினம் பி.ப. 5.30 மணிக்கு 'அன்றாட வாழ்வில் ஆன்மீகம்' என்ற தலைப்பில் ஸ்ரீ ராஜேஸ் பகவத் ராஜாஜி சொற்பொழிவாற்றுவார். (ஒ)

## பனை, தென்னை வள சங்க ஊழியருக்கு பணி வழங்கவில்லை

தென்மராட்சி,பெப்.26

கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றிய பத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு இடம் பெயர்வுக்குப் பின்னர் இன்னமும் வேலை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இடம்பெயர்வின் போது சங்க ஊழியர்கள் பலர் இடை நிறுத்தம் செய்யப்பட்டதாகவும் -

மீண்டும் கொடிகாமத்தில் சங்க அலுவலகம் இயங்கத் தொடங்கி ஆறு மாதங்களாகியும் ஒரு சிலருக்கே வேலை வழங்கப்பட்டுள்ளதாகவும்-

இன்னமும் பத்துக்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு வேலை வழங்கப் படவில்லை எனவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## பஸ் சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

வடபிராந்தியப் போக்குவரத்து சபை தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைவரை பஸ்சேவையை நீடித்துள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துசபை முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது. இதுவரை காலமும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிவரையே பஸ் சேவை நடத்தப் பட்டது.

தற்போது தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை புற்றுநோய் வைத்தியசாலைக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. இதனையடுத்தே இந்த பஸ் சேவை தெல்லிப்பழை புற்றுநோய் வைத்திய சாலைவரை நீடிக்கப்பட்டுள்ளது. இச்சேவை காலையும், மாலையும் நடைபெற்றுவருகிறது. (ஒ-139)

## நாரந்தனையில் சமுர்த்தி வங்கி திறப்பு விழா

காரைநகர்,பெப்.26

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் முதலாவது சமுர்த்தி வங்கி இன்று புதன்கிழமை நாரந்தனையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இத் திறப்பு விழாவில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-73)

## மாணவர்களுக்கு நிதி உதவி வழங்க பிரதேச சபை முடிவு

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் 2000 மற்றும் 2002 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதி பெற்றவர்களுக்கும், 2002ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் நல்லூர் பிரதேச சபையால் நன்கொடை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பெறத் தகுதியுடையவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 31ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படியும் -

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாமெனவும் -

பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ)

## இடம்மாற்ற அறிவித்தல்

**திருக்கணித நிலைய ஜாதக வேலைகளுக்காக ஓடர் தந்தவர்களும் மற்றும் வாடிக்கையாளர்களும் இன்றுமுதல் எமது சொந்த இல்லமாகிய *கல்வயல், சாவகச்சேரி* முகவரியில் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். ஏற்படும் சிரமங்களுக்கு தயவுசெய்து மன்னிக்கவும்.**

**விவாகப் பொருத்தம் நிச்சயிக்கவும், ஸ்புட ஜாதகம் மற்றும் அஷ்டவர்க்கம், தசவர்க்கம், தசாபலன், புத்திபலன் என்பவற்றோடு கூடிய கணனிமுறை ஜாதகம் என்பன எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.**

*தொடர்பு :-* "வேதாகம சோதிட பூஷணம்"

**சி.சிதம்பரநாதக் குருக்கள்**

*"சியாமளா பவனம்",*
*கல்வயல் - சாவகச்சேரி.* (சி-26696)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 05 - 12 - 1965



ஆண்டவன் கையில் 26 - 02 - 1994

### செல்வன் நாகமுத்து சக்குணபாலா (அங்கு)

*(ஜேர்மனி)*

திதி: 26.02.2003

*கை நிறைந்த செல்வமே சக்குணா!*
*நீர் ஓடி மறைந்து ஒன்பது ஆண்டுகள்;*
*ஆனால் எம்துயர் தீரவில்லை மகனே!*
*என்று காண்போம் இவ்வுலகில் உன் இனிய முகம்?*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*தகவல்:*
*M.N.மகேந்திரன் (அண்ணன்),*
*மாரியம்மன் லேன்,*
*திருநெல்வேலி.* (14937)

உம் நினைவால் துயருறும்:
ஐயா, அம்மா, சகோதரர்கள், ஆசை அக்கா,
மைத்துனர், மைத்துனிமார், தம்பி [illegible] (லண்டன்),
மாமன்மார், மாமிமார், உறவினர்கள்.

## நீங்கா நினைவில் ஈராண்டு



### திருமதி சின்னையா சின்னம்மா

*மண்ணுலகில்* 05-05-1925

**திதி: 26.02.2003**

*விண்ணுலகில்* 24-02-2001

அன்னையைப் போல் உலகில் தெய்வமில்லை
அவர் அடி தொழ மறப்பவர் மனிதரில்லை
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
அம்மா உங்கள் நினைவுகள் அழியாது.

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*நாகம்மாள் கோயில் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.* (14943)

- இராசரத்தினம்
குடும்பத்தினர்.


## G.A.Q., 1st IN Com. (2003/2004)

**பேராதனை, யாழ். பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

- ★ A/L இல் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம்) இவற்றில் 3பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் மேற்குறிப்பிட்ட பட்டப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.
- ★ இவற்றிற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
- ★ பல்கலைக்கழகப் பதிவுகள், விரிவுரைகள் தொடர்பான சகல விபரங்களையும் நேரில் பெற்று அறிந்து கொள்ளவும்.

*குறிப்பு:* G.A.Q.-2004 ஆங்கில இலக்கியம் ஆரம்பம் - 01.03.2003

*விவரங்களுக்கு:*
**S.அருள்நங்கை,**
**புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

(14942)

உதயன்

# தமிழரின் போராட்டம் புரட்சியா? பயங்கரவாதமா?

"பயங்கரவாதம் வேறு; புரட்சிகர இயக்கங்கள் வேறு. இவை இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகள்குறித்து அறிவதற்கு ஒரு நெறிமுறை தேவை." - இப்படிக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் 13ஆவது மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

"ஒரு நாட்டின் சமூக, பொருளாதார ஆட்சியதிகாரக் கட்டமைப்புக்களைப் பரந்தளவில் மாற்றியமைப்பதற்கான புதிய கோட்பாட்டை முன்வைப்பது - புரட்சி."

"மறுபுறத்தில் பயங்கரவாதம் என்பது பேரழிவைத் தருவது, மாறாத தீவிரப் போக்கினாலும் பழிவாங்கும் மனப் போக்கினாலும் அது உருவெடுக்கின்றது. கண்மூடித்தனமாக வீதைக்கப்படும் சந்தைப் பொருளாதாரம் காரணமாக சமூகத்தின் சிற்சில பிரிவினரைக் கொச்சைப்படுத்தி சீரழிப்பதன் விளைவாகவும் அது உருவாகின்றது. அநீதி இழைக்கப்படுகின்றது என்ற உணர்வுதான் அபிலாஷைகள் சிதைக்கப்பட்ட நிலையில் வன்முறையாகவோ, பயங்கரவாதமாகவோ வெடிக்கின்றது." - என்றும் ஜனாதிபதி குமாரதுங்க கூறியிருக்கின்றார்.

இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் நடத்துகின்ற உரிமைப் போராட்டத்தை - ஆட்சியதிகாரக் கட்டமைப்பு மாற்றத்துக்கான இந்தப் போராட்டத்தை - தாம் குறிப்பிடுகின்ற 'புரட்சி', 'பயங்கரவாதம்' என்ற இரண்டில் எதனுள் அவர் அடக்க விரும்புகிறார் என்பதே கேள்வி.

அவர் சுட்டிக்காட்டும் மற்றொரு விடயமும் இலங்கைப் பிரச்சினையின் அடிப்படையில் கவனிக்கத் தக்கது.

"மக்களின் நியாயமான அரசியல் மற்றும் சமூக, பொருளாதார எதிர்பார்ப்புக்களை நன்கு ஆராய்ந்து, பயங்கரவாதச் செயல்களிலிருந்து அவற்றைப் பிரித்தறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்காக நேர்மையாகவும் தீவிரமாகவும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்" - என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். தாம் இப்போது குறிப்பிடுகின்ற இந்த வழிமுறையில் அவர் செயற்பட்டாரா, செயற்படுகின்றாரா என்பது வேறு விடயம்.

ஜனாதிபதி குமாரதுங்க இப்போது குறிப்பிடும் இந்த விவகாரத்தை 15மாதங்களுக்கு முன்னர் 2001 நவம்பர் 27ஆம் திகதி தமது மாவீரர் நாள் உரையில் தலைவர் பிரபாகரன் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

"அரசியல் இலட்சியங்களை அடைவதற்காக நடத்தப்படும் வன்முறை தழுவிய உரிமைப் போராட்டங்கள் அனைத்திற்குமே உலக அரசுகள் 'பயங்கரவாதம்' என்ற முத்திரையைக் குத்தியுள்ளன. இந்தக் குறுகிய வரைமுறையின் அடிப்படையில் உண்மையான உரிமைப் போராட்டங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் மத்தியிலான வேறுபாடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அடிப்படை அரசியற் சுதந்திரங்களுக்காகவும் சுயநிர்ணய உரிமைக்காகவும் இரத்தம் சிந்திப் போராடும் விடுதலை அமைப்புக்களின் தார்மீக அடிப்படைகளுக்கு இதுவொரு சவாலாகவும் எழுந்துள்ளது. இது ஒரு கவலைக்குரிய விடயம். இந்தப் புதிய போக்குக் காரணமாகச் சர்வதேச அரங்கில் எமது சுதந்திர இயக்கத்திற்கும் அவப்பெயர் ஏற்பட்டு வருகிறது.

"பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் உலக நாடுகள், முதலில் அரசியல் வன்முறையின் மூலவேர்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அரசியல் வன்முறையின் தோற்றப்பாடு பற்றி ஓர் ஆழமான பார்வை இருந்தால்தான் உண்மையான விடுதலைப் போராட்டங்களுக்கும் குருட்டுத்தனமான பயங்கரவாதச் செயல்களுக்கும் மத்தியில் வேறுபாடு காணமுடியும்."

- இப்படித் தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே, 'புரட்சி வேறு; பயங்கரவாதம் வேறு' என்று மொட்டையாகக் கூறுவதன் மூலம் ஜனாதிபதி குமாரதுங்க சோற்றுக்குள் புதைக்க முயலும் பூசனிக்காய் எது என்பது தெளிவாகின்றது.

அடிப்படை அரசியல் சுதந்திரங்களுக்கான - சுய நிர்ணய உரிமைக்கான - நியாயமான போராட்டங்களை பயங்கரவாத முத்திரை என்ற சோற்றுக்குள் மறைத்துவிட முயல்வது பலிக்குமா என்பது சந்தேகமே.

# கூட்டணி யாழ். அலுவலகத்திலிருந்து தளபாடங்கள் மாநகர சபைக்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். ஸ்ரான்லி வீதி அலுவலகத்திலிருந்து யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான தளபாடங்கள் நேற்று சபை அலுவலகத்திற்கு மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டதாக மாநகராட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த காலங்களில் யாழ். மாநகர முதல்வர்களாக தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களே பொறுப்பு வகித்து வந்தனர். அப்போது, அவர்கள் தமது பாவனைக்கெனக்கூறி மாநகரசபையின் தளபாடங்கள் சிலவற்றை கூட்டணி அலுவலகத்துக்கு எடுத்துச்சென்றிருந்தனர். மேயர் உட்பட கூட்டணி உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்பதவிகளை விட்டு விலகிவிட்டனர். அத்துடன் மாநகரசபையின் பதவிக் காலம் முடிவடைந்ததன் அடிப்படையில் ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ் மாநகராட்சி கொண்டுவரப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆணையாளரின் உத்தரவுப்படி மாநகராட்சிக்கு சொந்தமான தளபாடங்கள் கூட்டணி அலுவலகத்திலிருந்து மீளப் பெறப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஒ-9)

## திருவீதி மான்மியம்



தெருவோரம் வாய்க்கால் வெட்ட
தீர்த்தகேணியோ? என வினவ
பெரும் குழல் பலவும் தாட்டு
பேசவே தொலைபேசி என்றார்
இருட்டினில் வருவோர் இங்கு
இடர் பட்டு விழுவாரென்ன
தரமான புக்கை கட்டில்
தணிந்திடும் வீக்கம் என்று
மரம்போல அங்கு நின்ற
மதிகெட்ட மனிதன் சொன்னான்
சிரம் தாழ்த்தி இதனைக் கேட்டு
சிந்திக்க உமக்கு சொன்னேன்.

- விகடகவி.

# அணிசேரா மாநாட்டு நிகழ்வுக்கும் தாமதமாகச் சென்ற ஜனாதிபதி

கொழும்பு,பெப்.26

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தாமதம் குறித்து பல செய்திகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன. தற்போது அணிசேரா நாடுகளின் மாநாட்டு நிகழ்ச்சிக்கும் ஜனாதிபதி தாமதமாகச் சென்றமை பற்றி சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மலேஷியாவில் கோலாலம்பூர் நகரில் அணிசேரா நாடுகள் அமைப்பின் 13ஆவது மாநாடு நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் சம்பிரதாய நிகழ்வாக பத்து நாடுகளின் தலைவர்களை மாநாட்டு மண்டபத்திற்கு அழைத்துச் செல்வதாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது குறித்து அந்தத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அழைத்துச் செல்லப்படவிருந்த பத்து நாடுகளின் தலைவர்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஒருவராவார்.

ஆனால், மாநாடு ஆரம்பமானபோது மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படவிருந்த தலைவர்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தவிர்ந்த ஏனையோர் சமுகமளித்திருந்தனர். எனவே, ஏற்பாட்டாளர்கள் வேறு வழியின்றி அந்த ஒன்பது தலைவர்களை மட்டும் மாநாட்டு மண்டபத்திற்குச் சம்பிரதாய ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஊர்வல நிகழ்வில் கலந்துகொள்வதற்கு வசதியாக ஹோட்டலில் இருந்து உள்ளூர் நேரப்படி காலை 9.05இற்கு முன்னர் புறப்பட்டு மாநாட்டு மண்டபத்திற்கு வந்துவிடுமாறு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்பாட்டாளர்கள் நேரகாலத்துடன் தெரிவித்திருந்தனர். ஆனால், ஜனாதிபதி ஹோட்டலை விட்டுக் காலை 9.25 மணிக்கே புறப்பட்டுள்ளார்.

காலந்தாழ்த்திவந்த ஜனாதிபதி சந்திரிகாவை வாசலில் வரவேற்ற ஏற்பாட்டாளர்கள் உடனடியாக அவரை வேறு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு தங்கவைக்கப்பட்டு சிறிது நேரத்தின் பின்னரே ஜனாதிபதி சந்திரிகா மாநாட்டு மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

# புரட்சி வேறு; பயங்கரவாதம் வேறு வேறுபடுத்தும் நெறிமுறை அவசியம்!

## அணிசேரா நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு,பெப்.26

புரட்சிகர இயக்கங்களிலிருந்து பயங்கரவாதம் என்பது எவ்வாறு வேறுபடுகிறது? இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன? இவை பற்றி அறிவதற்கு ஒரு நெறிமுறை தேவை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

மலேஷியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான 117 நாடுகள் பங்குபற்றும் - அணிசேரா நாடுகளின் 13ஆவது மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஓராண்டு நிலைத்திருக்கிறது. பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் அரசு-புலிகள் சமாதானப் பேச்சுகள் தொடர்கின்றன.

அணிசேரா நாடுகள் அமைப்பின் புதிய பங்கினையும், பொறுப்புகளையும் மதிப்பீடு செய்வதற்கான தருணம் வந்துவிட்டது. அங்கத்துவ நாடுகளிடையே தொடர்ந்தும் இடம்பெறும் ஆயுதத் தகராறுகள், சர்வதேச பயங்கரவாதம் போன்றவற்றுக்கான காரணங்களை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கு அணிசேரா நாடுகளின் அமைப்பு முன்வரவேண்டும்.

ஐ.நா.சபையின் அங்கீகாரம் இல்லாமல் இறைமை உள்ள ஈராக்மீது யுத்தம் தொடரக்கூடாது என்ற நிலைப்பாட்டை இலங்கை கொண்டுள்ளது.

ஈராக் விவகாரத்திற்கு பேச்சுக்கள்மூலம் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கை உண்டு.

- இவ்வாறு அணிசேரா நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார். (ஒ)

# புலம்பெயர்ந்தோர் முதலீடு செய்ய வசதியாக 'தாயக ஒளி' திட்டம்

## தமிழீழ வைப்பகம் அறிமுகப்படுத்தியது

கிளிநொச்சி,பெப்.26

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தாயகத்தில் முதலீடுகளைச் செய்ய வசதியாக 'தாயக ஒளி' என்னும் திட்டத்தை தமிழீழ வைப்பகம் அறிமுகம் செய்துள்ளது.

இது தொடர்பாக தமிழீழ வைப்பக வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் அங்கிருந்துகொண்டே தமது பணத்தை தாயகத்தில் நம்பிக்கைத் தன்மையுடன் முதலீடு செய்யத் தமிழீழ வைப்பகத்தின் 'தாயக ஒளி' திட்டம் வகை செய்கின்றது.

தாயகத்தில் வேளாண்மை, கடற்றொழில் கைத்தொழில் துறைகளில் முதலீடுகளைச் செய்ய இத்திட்டம் வழி வகுக்கின்றது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் தமிழீழ வைப்பகத்தில் தங்களின் பெயரிலோ அல்லது 3ஆம் ஆளின் பெயரிலோ கணக்கினை ஆரம்பிக்கலாம். சாட்டுதல் செய்யப்படும் 3ஆம் நபர் மாதந்தோறும் வட்டியைப் பெற்றுக்கொள்ள முடியும். இதில் குறைந்த பட்சமாக 25ஆயிரம் ரூபாவை வைப்பில் இடவேண்டும். இது தொடர்பான விவரங்களை மக்கள் அறிந்துகொள்ள வசதியாக இணையத்தளம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## நாளை

மாசி 15
வியாழக்கிழமை
(27.02.2003)
திதி :ஏகாதசி
முற்பகல் 8.40வரை.
நட்சத்திரம்: பூராடம்
முற்பகல் 9.27வரை.
சுபநேரம் : 7.59 - 9.29
ராகுகாலம் : 1.59 - 3.29
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

உற்சாகத்தை வளர்க்க வெற்றிகள் உதவுகின்றன. உறுதியை வளர்க்க தோல்விகள் துணைசெய்கின்றன.

# நாகர்கோவில் மணல் பெறும் நடைமுறைகளில் மாற்றம்!

## சூழல் பாதுகாப்புத் தலைவர் தெரிவிப்பு

வலி.மேற்கு,பெப்.26

நாகர்கோவில் மணல் பெறுவது தொடர்பான புதிய நடைமுறை மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக குடத்தனை சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கழகத் தலைவர் எஸ்.அழகராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் - மணல் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பிரதேச செயலகங்களிலேயே விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

விண்ணப்பப்படிவங்களை விநியோகிப்பது தொடர்பான பொது மக்களின் சிரமங்கள் பற்றியும் பிரதேச செயலகங்களில் வைத்து விண்ணப்பப்படிவங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் 'உதயனில்' செய்தி வெளியானமை குறிப்பிடத்தக்கது. (ஓ-175)

# மார்ச் 2முதல் 16 பகுதிகளுக்கு 24மணிநேர மின் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.26

எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி யாழ்.குடாநாட்டின் 16பகுதிகளுக்கு 24மணிநேர மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது. இம்மின்விநியோகத்திட்டத்தை எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கருஜயசூரிய, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

குப்பிளான், குமரகோட்டம், புன்னாலைக்கட்டுவன் கிருஸ்ணன் கோவிலடி, கரந்தன், சிறுப்பிட்டி, வாதரவத்தை, ஆவரங்கால், தொண்டமனாறு சந்நிதி ஆலயம், பொலிகண்டி, வியாபாரி மூலை, வல்லிபுரக்கோவில், நவக்கிரி, நவாலி, மாதகல், இளவாலை, மாகியப்பிட்டி ஆகிய பகுதிகளுக்கே 24மணிநேர மின் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப்பகுதிகளில் 24மணிநேர மின் விநியோகத்தை வழங்குவதற்கான மின் இணைப்பு வேலைகளை மின்சார சபை துரித கதியில் மேற்கொண்டு வருகின்றது.

இந்தப் பகுதிகளில் சில இடங்களுக்கு ஏற்கனவே மின் பிறப்பாக்கிகள் மூலம் பகுதி நேர மின்விநியோகம் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-8)

## பின் முற்றாகும் தீர்வை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

இராஜா ஸ்கந்தராஜா பெண்
கோபாலபிள்ளை மகள் கிருபாலினி
மே/பா த.தணிகாசலம்
70, பலாலி றோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
- வழக்காளி

வழ. இல. மணநீக்கம்/336 எதிர்
இராஜா ஸ்கந்தராஜா,
163/2, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
- எதிராளி.

இவ்வழக்கு, இம்மன்றில் இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு தை மாதம் பதினாறாம் திகதி(16.01.2003) மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியையும், வழக்காளி சார்பில் திருமதி பவானி சற்குணராசாவும் சமுகமாக இருக்கவும், எதிராளிக்கெதிராக அழைப்புக்கட்டளை ஆனது உதயன் பத்திரிகை மூலம் விளம்பரம் செய்தும் எதிராளி இறுதியாக வசித்த இடத்தில் ஒட்டிய பதில் சேவகம் செய்தும், அழைப்புக் கட்டளை திரும்பல் தினமான 28.11.2002இல் எதிராளி மன்றுக்கு சமுகம் அளிக்காமையினால் இந்த வழக்கு ஒரு முக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கமைய ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு,

வழக்காளியின் சாட்சியம், வழக்காளியின் பிராது, ஆவணம் 'வ 1' வழக்கேடு ஆகியவை நன்கு பரிசீலனை செய்யப்பட்டு. வழக்காளி பிராதில் கோரியவாறு வழக்காளிக்கும், எதிராளிக்கும் (12.09.2001)இல் இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு புரட்டாதி மாதம் பன்னிரண்டாம் திகதி நடைபெற்ற திருமணப்பதிவு எதிராளி வழக்காளியை வன்ம உறவறுப்புச் செய்துள்ளார் என்ற காரணத்துக்காக ரத்துச் செய்யபட்டு வெற்றும் வெறிது மானதாக்கப்பட வேண்டுமெனத் திருப்திப்பட்டதன்மேல்,

குறித்த வழக்காளிக்கும், எதிராளிக்குமிடையே இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு புரட்டாதி மாதம் பன்னிரண்டாம் திகதி(12.09.2001) நடைபெற்ற திருமணம் எதிராளி வழக்காளியை வன்ம உறவறுப்புச் செய்துள்ளார் என்ற காரணத்துக்காக இதனால் ரத்துச் செய்யப்பட்டு வெற்றும் வெறிது மானதென பிரகடனப்படுத்தப் பட்டு கட்டளை யிடப்பட்டு பின்னுறுதித் தீர்வை அளிக்கப்படுகிறது.

மேலும் குறித்த வழக்காளி தன் கன்னிப் பெயரைப் பாவிக்கவும், திருமணமாகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்க உரித்துடையவர் எனவும் இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வை அளிக்கப்படுகிறது.

இத்தீர்வை பற்றிய அறிவித்தல் எதிராளிக்கு பதிற் சேவையாக மன்றில் பிசுக்கால் உத்தியோகத்தர்மூலம் அவரது இறுதியாக வசித்த விலாசத்தில் ஒட்டப்படும். "உதயன்" பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் மூன்று(03) மாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை எது வும் தெரிவிக்காத பட்சத்தில் இப்பின்முற்றாகும் தீர்வை முற்றான தீர்வையாக்கப் படும். 2003ஆம் ஆண்டு மாசி மாதம் 16ஆம் திகதி.

ஒப்பம்: இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைவு
பவானி சற்குணராசா
வழக்காளியின் சட்டத்தரணி.

(14936)

## சுழற்சி முறையில் கட்டுமரம் விநியோகம்

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஏழு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடனடிப்படையில் 3 லட்சத்து 36ஆயிரம் ரூபா பெறுமதி யான கட்டுமரங்களை ஐ.நா.அபி விருத்தித் திட்டம் வழங்கியுள்ளது.

செம்பியன்பற்று, தாளையடி, வத்திராயன், உடுத்துறை, மருதங் கேணி, ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களுக்கே தலா 3 கட்டுமரம் வீதம் 21 கட்டு மரங்கள் வழங்கப் பட்டுள்ளன. (எ-36)

## சிற்றூர்திகளில் தவறவிடப்பட்ட பொருள்கள் மீட்பு

அச்சுவேலி - யாழ்ப்பாணம் இடையே சேவையில் ஈடுபட்ட சிற்றூர்திகளில் பிரயாணிகளினால் தவறவிடப்பட்ட ஆபரணம் உட்பட சில பொருள்கள் மீட்கப்பட்டு வலி.கிழக்கு தனியார் சிற்றூர்திச்சேவைச சங்கத் தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இப்பொருள்களின் உரிமையாளர் தகுந்த ஆதாரங்களைக் காட்டிச் சங் கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள லாம் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.


### தேவை

மில்வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை.

தொடர்பு: பாலனமில்
மாவடிச் சந்தி,
வட்டுக்கோட்டை.

(14915)


## வடக்கு - கிழக்கில் தெரிவான

# ஆசிரிய நூலகருக்கான செயலமர்வு விரைவில்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் நூலகர் களுக்கான பயிற்சிகள் மிக விரைவில் வழங்கப்படவுள்ளன. இதற்கான அனு மதியை உலகவங்கி வழங்கியுள்ளது. இதற்கு அமைவாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் முதற்கட்ட செயலமர் வினை நடத்துவதற்காக 7 லட்சத்து 84 ஆயிரத்து 700 ரூபா ஒதுக் கப்பட்டுள்ளதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.அனந்தராஜ் தெரி வித்தார்.

இதற்கமைய நூலக தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகம், கொழும்பு தேசிய நூலகம் ஆகியன இணைந்து 05 நாள்கள் செயலமர்வை ஒழுங்கு செய்துள்ளன. 568 ஆசிரியர் நூல கர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள போதி லும் 332 பாடசாலை ஆசிரியர் நூல கர்களுக்கே முதற்கட்டமாக பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதில் பங்குபற்றுபவர்களுக்காக தங்குமிட வசதி, உணவு மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படுமென வும் -

பயிற்சி பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் -

தெரிவிக்கப்பட்டது.

(ஒ-290)


### மொழிபெயர்ப்பாளர் தேவை

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்ய மொழிபெயர்ப் பாளர்கள் தேவை. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்வேண்டும். பணி செய்யுமிடம் கிளிநொச்சி. தங்குமிட வசதி அளிக்கப்படும். சம்பளம் பேசித்தீர்க்கப் படும். சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. :- 1796,
C/o உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(14803)


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 19**

நாளை (27.02.2003) இடம்பெறவுள்ள கனடாவுடனான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணித்தலைவர் பொலக் 3 விக்கெட்டுகளுக்கு மேல் கைப்பற்றுவாரா?

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ. அட்டை எண்: ..............................

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (27.02.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 19, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**Super Six பரிசுகள்**

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. .................... 2. ....................
3. .................... 4. ....................
5. .................... 6. ....................

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ.அட்டை எண்: ..............................




முதற் பரிசு
மைக்கிரோ பிசி தரும்
கணனி



2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி

விசேட பரிசுகள்
அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்



Super Six பரிசு
ஓமாலா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ.அட்டை எண்: ..............................

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**
Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு ஓமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

# வவுனியாவில் சில தனியார் பஸ் ஊழியர் திங்கள் வேலைநிறுத்தம்

வவுனியாவில் உள்ள தனியார் பஸ் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் வேலைநிறுத்தம் மேற்கொண்டனர். இரண்டு பஸ் சங்கங்கள் இருக்கும் வவுனியாவில் ஒரு சங்கத்தின் ஊழியர்களே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பதிவுசெய்யப்பட்ட சங்கத்தினர், பதிவுசெய்யப்படாத சங்கத்தின் உறுப்பினர்கள் தமக்கு பணம் செலுத்தினாலேயே சேவையில் ஈடுபட அனுமதிக்க முடியும் என்று தெரிவித்திருப்பதும் பதிவு செய்யப்படாத சங்கத்தினர் பணம் கொடுக்க மறுத்திருப்பதுமே இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதற்கான காரணமாகும்.

பதிவு செய்யப்படாத சங்கத்தினர் மட்டும் மேற்கொண்ட இந்த வேலைநிறுத்தத்தினால் பிரயாணிகளுக்குப் பெரும் சிரமம் ஏற்படவில்லை.

# பாடசாலை விடுதிகள் தொடர்பாக கணக்கெடுப்பு

மண்டைதீவு,பெப்.26

நாட்டில் உள்ள சகல கல்வி வலயங்களில் இருந்தும் பாடசாலை விடுதிகள் தொடர்பான புள்ளிவிவரங்கள் திரட்டப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு இது தொடர்பான சுற்றுநிருபத்தை சகல கல்வி வலயங்களுக்கும் அண்மையில் அனுப்பிவைத்துள்ளது.

நாட்டில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களை பதவி அமர்த்துவதில் விடுதிகளின் அவசியம் பற்றி உணரப்பட்டதாலேயே இந்தக் கணக்கெடுப்பை நடத்த அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாவனையில் உள்ள, இல்லாத விடுதிகள் மற்றும் உரியமுறையில் பராமரிக்கப்படாதிருக்கும் விடுதிகள் தொடர்பான விவரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

விடுதிகள் இல்லாதபொழுதும் பாடசாலையின் வேறு கட்டடங்களில் ஆசிரியர்கள் தங்கியிருந்தால் அவையும் விடுதியாகவே கொள்ளப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் 28.02.2003இற்கு முன் கல்வி அமைச்சின் கொள்கை திட்டமிடல் கண்காணிப்புப் பிரிவின் மேலதிக செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். (ம-88)

# மக்களால் நடத்தப்படுவது சமுர்த்தி வங்கி மட்டுமே!

## உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வலி.மேற்கு,பெப்.26

மக்களால் நடத்தப்படுகின்ற வங்கி சமுர்த்தி வங்கி மட்டும் என்பதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். எமது நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் செயற்படுகின்றன. சமுர்த்தி வங்கி மட்டும் மக்களினால் தெரிவு செய்யப்படும் வங்கிக் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரின் கட்டுப்பாட்டில் செயற்படுகின்றது. இவ்வாறு யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் வட்டுக்கோட்டையில் சங்கானைப் பிரதேச முதலாவது சமுர்த்தி வங்கியை திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். இந்த சமுர்த்தி வங்கித் திறப்பு விழா சங்கானைப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் என்.சிவபாதசுந்தரம தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

மக்கள் உணவுக்காகப் போராடுவது மட்டும் வறுமை இல்லை. கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்ற மக்களும் வறுமையான மக்களே. இப்படிப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார நிலையினை அபிவிருத்தி செய்வதற்கும், சேமிக்கத் தெரியாத மக்களிடத்தில் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்குமே சமுர்த்தி வங்கி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மற்றைய வங்கிகளுக்கு மக்கள் செல்ல வேண்டும். ஆனால், சமுர்த்தி வங்கி மட்டும் மக்களை நாடிச் செல்கின்றது. சமுர்த்தி வங்கியில் பணிபுரிகின்ற அதிகாரிகளுக்கு அரசு வேதனத்தைக் கொடுத்து மக்களின் கட்டுப்பாட்டுக்குள் செயற்படுத்துகின்றது. சமுர்த்தி வங்கியில் சேமிக்கப்படும் பணம் முழுவதும் அந்தப் பிரதேச மக்களுக்கே கடனாக வழங்கப்படுகின்றது. இதன் மூலம் சமுர்த்தி வங்கி வறிய மக்களின் சமூக பொருளாதாரத்தின் அபிவிருத்திக்காக ஆரம்பிக்கப்பட்ட வங்கி ஆகும் - என்றார் அவர்.

சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் எஸ்.செல்வராசா, உதவிப் பிரதேச செயலர் கே.தர்மராசா ஆகியோரும் உரையாற்றினார்கள். (ஒ-175)

## சிலாபம் பகுதியில் கள்ளச் சாராய உற்பத்தி:

# கலால் அதிகாரிகளால் கைதான ஆறு பேரை எம்.பி. விடுவித்தாராம்!

கொழும்பு,பெப்.26

சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கையில் கலால் திணைக்களத்தின் சுற்றிவளைப்புப் பிரிவினரால் சிலாபம் பகுதியில் வைத்து 6 பேர் கைதுசெய்யப்பட்டனர். ஆயினும், புத்தளம் மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவராலும் அவரது ஆதரவாளர்களாலும் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

சிலாபப் பகுதியிலுள்ள ஒரு தீவில் நடைபெற்று வந்த சட்டவிரோத மதுபான உற்பத்திச்சாலைகள் பலவற்றைக் கலால் திணைக்கள சுற்றிவளைப்புப் பிரிவு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் காலை சுற்றிவளைத்தனர். 5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட மதுபானங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுடன் 6 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருந்த வேளையில், புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுமார் 200 ஆதரவாளர்களுடன் அந்த இடத்திற்கு வந்திருக்கிறார்.

கைதுசெய்யப்பட்ட 6பேரும் தனது நெருங்கிய ஆதவாளர்கள் என்பதால் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதை அனுமதிக்க முடியாது என்று அவர் கூறினாராம்.

இருப்பினும், கைதுசெய்யப்பட்டோரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கலால் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர். அப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினரும் அவர்களது ஆதரவாளர்களும் கைதுசெய்யப்பட்ட அறுவரையும் பலவந்தமாக விடுவித்துச் சென்றனர் எனக் கூறப்படுகிறது. (ம)

## புதிய குருமுதல்வர் நியமனம்

யாழ்.மறை மாவட்டத்தின் புதிய குரு முதல்வராக அருட்திரு.ஜே.நீக்லஸ் அடிகளார் யாழ்.ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1996ஆம் ஆண்டு முதல் இவர் கொழும்புத்துறை புனித சவேரியர் குருத்துவக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. 1997ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலும் யாழ்.மறைமாவட்ட குருமுதல்வராக அருட்திரு.ஜே.ஈ.பி. செல்வராசா அடிகள் பணிபுரிந்து வந்தார். (ஒ-30)

## பொது எழுதுநர் சேவை பதவி உயர்வுக்கு நியமனக் கடிதங்கள்

அரச சேவையிலும், மாகாண அரசின சேவையிலும் பணியாற்றும் சிறு பணியாளர்களை பொது எழுதுநர் சேவை வகுப்புII இற்கு பதவியுயர்த்துவதற்காக கடந்த வருடம் ஜூலை மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையிலும் பின்னர் நடந்த நேர்முகப் பரீட்சையிலும் தகுதிபெற்றவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுநிர்வாக அமைச்சு சம்பந்தப்பட்டவர்கள் கடமைபுரியும் தற்போதைய அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இக்கடிதங்களின்படி எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி திங்கட்கிழமை திருகோணமலை உப்புவெளியில் அமைந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சுக்கு சம்பந்தப்பட்டவர்களை நேரில் சமுகம் கொடுத்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் கேட்டுள்ளார்.

மார்ச் 17ஆம் திகதிக்கு முன்னர் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறுபவர்களது நியமனம் இரத்துச் செய்யப்பட்டு தகுதிபெற்ற வேறு ஒருவருக்கு நியமனம் வழங்கப்படும் எனவும், நியமிக்கப்பட்ட அலுவலகத்தில் தொடர்ந்து 5வருடங்கள் சேவைபுரிவதுடன் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் 10 வருடங்கள் தொடர்ச்சியான சேவைபுரிய வேண்டும் எனவும், நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-51)

## இலவச கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள முறைசாரக் கல்விப் பிரிவால் நடத்தப்படும் 2003ஆம் ஆண்டுக்கான இலவசக் கணனிப் பயிற்சி வகுப்புகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தொடங்கப்படவுள்ளன.

பாடசாலையை விட்டு வெளியேறிய சகல வயதுப்பிரிவு ஆண், பெண இருபாலாரும் இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப்படிவத்தினைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம். அடுத்த மாதம் 3ஆம் திகதி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என யாழ். மத்திய கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ)

## இறால் தொழிற்சாலை அமைப்பதைத் தடுக்க கோரிக்கை

நவாலி,பெப்.26

கல்லுண்டாய் பகுதியில் இறால் பதனிடும் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனால், பல ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிப்புக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். ஏற்கனவே இப்பகுதி உவர்நீர் பாத்திகளினால் சுமார் 200 ஏக்கர் வயல் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இறால் பதனிடும் தொழிற்சாலை அமைப்பதை உடனே தடுத்து நிறுத்துமாறு கோரி நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கு மகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர். (ஒ-100)

## இலங்கை வங்கியின் கருமபீடம் திறப்பு

நவாலி,பெப்.26

இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளையின் விசேட கருமபீடமொன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு, பிரதேச முகாமையாளர் எஸ்.நடராசலிங்கம் தலைமையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர் பொது அறையில் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையினால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படும். (ஒ-100)

# பொது நிகழ்வுகள்



சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு) பிரதேச செயலகத்தினால் பண்டத்தரிப்பில் நிறுவப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் நாடாவை வெட்டி வங்கியைத் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

சமுர்த்தி வங்கி நிதி நடவடிக்கைப் பணிப்பாளர் எஸ்.வியன்வல, சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராசா, வங்கி முகாமையாளர் எஸ்.சுபேந்திரராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(சண்டிலிப்பாய் செய்தியாளர்)*



யோ.ஜோன்சன் ராஜ்குமார் எழுதிய 'கம்பன் மகன்' நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டுவிழா அண்மையில் மறைக்கல்வி நடு நிலையத்தில் யாழ். திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில் நடைபெற்றது. அந்நிகழ்வில் யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜே.ஈ.பி. செல்வராசா அடிகளாரிடம் இருந்து நூலின் முதற்பிரதியை நாவாந்துறை கடற்கன்னி நிறுவன இயக்குநர் செபஸ்தியாம்பிள்ளை பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். *(கொழும்புத்துறை செய்தியாளர்)*



வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் 2003ஆம் ஆண்டுக்கான மனையியல் பயிற்சி நெறியை வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் ச.செல்வராசா நாடாவை வெட்டி திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுதாகர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.அரசரத்தினம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)



வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் தையல் மனையியல் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது.

இந்த ஆரம்ப விழாவினை உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசா சுடர்களை விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். *(வலி.மேற்கு செய்தியாளர்)*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கார் விற்பனைக்கு

கில்மன் கண்டர் வகைக் கார் (2003ஆம் ஆண்டு முடிவுக்குரிய வாகன வரி செலுத்தப்பட்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.பரராஜசிங்கம், 42, புங்கன்குள வீதி, கொழும்புத்துறை. **T.P. 5623.** (14903)

## விற்பனைக்கு

2 Sri தொடர் இலக்க **Austin Cambridge** வெள்ளைவான் விற்பனைக்குண்டு. தொடர்பு: தொலைபேசி இல. 07777 - 28045.(சி-26634)

பூச்சி நீக்கப்பட்ட நல்லின அல்சேசன் (ஆண், பெண்) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தினமும் பிற்பகல 4.00-6.00 மணி வரை பார்வையிடலாம். 69B, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவிலடி, பாடசாலையின் முன்னால்). (14929)

கறுப்புநிற பெரிய கடா ஆடு விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.இராசேந்திரன், இல.55, டேவிற் றோட், குருநகர். (14917)

மோட்டறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: தாஸ், சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. (14940)

**Prima Broiler** மற்றும் இறைச்சிக கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, உங்களுக்குத் தேவையான நிறைகளில், நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை) தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), நல்லூர். (13977)

கல்பேட், புறொயிலர் விற்பனைக்குண்டு. **1Kg 140/-** சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். (14906)

## திருமண சேவை

**Londan, Canada** நாடுகளில் நிரந்தர வதிவிட உரிமையுடன் **Computer Engineer** ஆக உள்ள ஆண், பெண் குறிப்பு மற்றும் கிறிஸ்தவ ஆண், பெண் சகலருக்கும் மணமக்கள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (14950)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டப்படிப்பு படிக்கும் அழகான மணமகளுக்கு படித்த, லண்டன் ஸ்பொன்சர் உள்ள மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 1802, உதயன், யாழ்ப்பாணம். (14947)

## ENGLISH CLASSES

**O/L, A/L, G.A.Q., B.A.** மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கிலம் இலகு முறையில் ஆரம்பம்: 01-03-2003 (புதிய இடத்தில்) **K.**சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (14924)

## வீடு வாடகைக்குத் தேவை

3 பேரைக் கொண்ட ஆசிரியர் குடும்பம் ஒன்றிற்கு வீடு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வாடகைக்குத் தேவை. யாழ்.நகர், கோப்பாய், உரும்பிராய்க்கு இடைப்பட்ட பகுதிகளில் இருப்பது விரும்பத்தக்கது. தொடர்பு விளம்பர இல. 1801, C/o உதயன் (14930)

மருத்துவபீட மாணவர்கள் குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் வீடு கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர், யாழ்நகரப் பகுதியில் வாடகைக்குத் தேவை. தொடர்பு: 0776-003317, 0777-609918 விளம்பர இல. 1800, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (14926)

## நடமாடும் சேவை தினங்கள் மாற்றம்

தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கான பிரதேச செயலக நடமாடும் சேவையின் நாள்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இந்த நடமாடும் சேவை மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது செவ்வாய்க்கிழமைகளில் கொடிகாமத்தில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடத்தப்படுமென தென்மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முன்னர் வாரத்தில் செவ்வாய்க் கிழமைகளில் இந்த நடமாடும் செயலகம் இயங்குமென அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இடைக்குறிச்சி J/341
கிராம உத்தியோகத்தர்

### திரு.ந.இராசகுமாரன்

அவர்கள் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு மகிழ்வுடன் பாராட்டி அவர் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெறுவதுடன் இவரது சேவை எமது பகுதிக்கு தொடர்ந்தும் கிடைக்கவேண்டுமென உளப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

- மாதர் அபிவிருத்திச் சங்கம்.

*இடைக்குறிச்சி,*
*வரணி.*
(14678)

## கள மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

வன்னியில் இயங்கிவரும் கண்ணிவெடியகற்றும் தொண்டு நிறுவனத்திற்கும், விழிப்புணர்வுப் பணிகளுக்கும் கள மொழி பெயர்ப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

வயதெல்லை:- 20 - 40 இற்குள்
சம்பளம்:- ஆகக் குறைந்தது 9000/-

ஏனையவை பேசித்தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதிக்கு முன்பதாகத் தமது விண்ணப்பங்களை
விளம்பர இல. 1803,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
**T.P: 021-222 3947**
(14956)

## கண்ணீர் அஞ்சலி

யா/கம்பர்மலை அ.த.க. பாடசாலை (வல்வெட்டித்துறை)யில் 15வருடங்களாக தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற

### கணபதி சீனித்தம்பி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- பழைய மாணவர்கள்.

யா/கம்பர்மலை அ.த.க.பாடசாலை,
வல்வெட்டித்துறை.
(14957)

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் மேற்கு முன்னாள் பிரதேச செயலர், வலிகாமம் மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் ஸ்தாபகர், கலைக் காவலன்

### கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் அகால மரணத்தினால் துயருறும் அன்னாரின் குடும்பத்துடன் சேர்ந்து கலாசாரப் பேரவையினரும் அனுதாபந் தெரிவித்து அமரருக்கு தமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றனர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
கலாசாரப் பேரவையினர்
வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகம்,
சங்கானை.
(சி-26700)

## தொடர்பு கொள்ளவும்

குறியுள்ள ஒரு பசுமாடு தொல்புரம் விவசாயிகள் சம்மேளனப் பகுதியிலுள்ள வயலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் 01.03.2003க்கு முன் தலைவருடன் தொடர்பு கொள்ளவும். இல்லையேல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

தொடர்பு:
*ஞா.சிதம்பரநாதன்* J.P.
தலைவர், விவசாயிகள் சம்மேளனம்,
தொல்புரம்.
(14951)

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல வருடங்களாகத் தொடர்ந்துவந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக அரச தேவைக்காக சுவீகரிக்கப்பட்ட தனியார் காணியின் சொந்தக்காரர்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இதன் காரணமாக இக்காணிச் சொந்தக்காரர்களுடன் தொடர்புகொண்டு அவர்களது காணிக்கான நஷ்டஈட்டுப் பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது. எனவே, அரசினால் சுவீகரிக்கப்பட்டு இதுவரை நஷ்டஈடு பெறாத காணிகளின் சொந்தக்காரர்கள் பின்வரும் விபரங்களை இச்செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1) காணி உரிமையாளர் பெயர்
2) தற்போதைய முகவரி
3) என்ன தேவைக்காக காணி சுவீகரிக்கப்பட்டது
4) செயலக கோவை இலக்கம் (தெரிந்திருப்பின்)
5) உரிமையாளர்கள் இறந்திருப்பின், அவரின் பின் உரித்தாளரின் பெயரும், முகவரியும்.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.
(C/26701)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **செல்வி நடராஜா சிவசோதி**
அவர்களின் அன்புத் தந்தையார்

### கதிரவேலு நடராஜா

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உடுவில் உதவிப் பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.
(சி-26695)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் சதாசிவம்

யாழ்ப்பாணம், ஆவரங்கால் புத்தூரை பிறப்பிடமாகவும் சிலாபம் முன்னேஸ்வரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சதாசிவம் அவர்கள் 23.02.2003 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.திருமதி பொன்னம்பலம் செல்லம்மா அவர்களின் அன்பு மகனும் திருமதி கனகாம்பாள் அவர்களின் ஆருயிர்க் கணவரும் குகன (ஜேர்மனி), ரமணி, தவன் (இத்தாலி), ரஜனி, சயந்தன் (கொரியா), வதனன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமார் (கட்டார்), லக்கி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபினேஷ் (ஜேர்மனி), சௌத்ரி, கௌசல்யா, அரவிந்த், பிரவீன் வாசிஹா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.02.2003) புதன்கிழமை சிலாபம் முன்னேஸ்வரம் ஐயனார் கோயில் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் மாலை 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்வத்தை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொலைபேசி :- 032-23921*

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
பெறாமக்கள்.
(சி-26698)

### சின்னத்தம்பி சடாட்சரம் (ஓய்வுபெற்ற அதிபர்)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சடாட்சரம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள் 24.02.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்தியர் சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் ஸ்ரீதேவி, ரஞ்சித்குமார் (லண்டன்) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஸ்ரீநிகேதன்"*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

தகவல்:
அ.தம்பித்துரை
*(பெறாமகன்-ஓய்வுபெற்ற அதிபர்),*
(14954)




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG
**JAFFNA ELECTRICALS**
Authorised Dealer For
**Abans**
141, POWER HOUSE ROAD, JAFFNA.
TEL: 021-222-5766



இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் பஜாஜ் மோட்டார் சைக்கிளுடன் வெற்றி நிச்சயம் !
விசேட கொடுப்பனவு!
ICC கிரிக்கட் போட்டியை முன்னிட்டு பெப். 5 முதல் மார். 23 வரை நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பஜாஜ் மோட்டார் சைக்கிளுடனும் ஹெல்மட், ஜக்கட் மற்றும் ரைடர் Bag ஒன்று இலவசம்.
pulsar
விலை ரூபா 106,925/-
• 150 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• 5 கியர்கள் கொண்ட
Caliber croma
விலை ரூபா 89,180/-
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.
Caliber
விலை ரூபா 81,672/-
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• நியம சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.
BOXER AT
விலை ரூபா 63,654/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
BOXER CT
விலை ரூபா 68,022/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
BOXER CT Deluxe
விலை ரூபா 70,934/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
M80 FOUR STROKE
விலை ரூபா 55,283/-
• 74 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
Legend
விலை ரூபா 83,037/-
• 145 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 65 கி.மீ.
Spirit
விலை ரூபா 56,739/-
• 60 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
Mel Ads
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து ஒரு பஜாஜ் மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு.
நீங்கள் நாடுவது வேகமா? சிக்கனமா? அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் DPMC வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். மற்றும் DPMC யின் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் சேவை, பராமரிப்பு மற்றும் உதிரிப்பாக வியாபார வலையமைப்பினூடாகவும், பிராந்திய அலுவலகங்களூடாகவும் தன்னிகரற்ற வேகமான வாடிக்கையாளர் சேவையையும் DPMC யின் ஒன்றுதிரட்டிய வளங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.
தன்னிகரற்ற உத்தரவாதம்
பஜாஜ் பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.
DPMC
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.
அதிகாரம் பெற்ற விற்பனையாளர் : குறிஞ்சி ட்ரேடர் 75, ஸ்டான்லி வீதி யாழ்ப்பாணம்
தொ.பே. 077-979279, 077-155730
: குறிஞ்சி ட்ரேடர் 6 நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே. 077-979279, 077-155730









திருமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணி வீரர்கள், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவிற்கு அறிமுகம் செய்துவைக்கப்படுவதையும் -

இரு அணிகளின் தலைவர்களும் மைதானத்தில் கைலாகு கொடுப்பதையும் -

திருமலை அணி துடுப்பெடுத்தாடுகின்ற காட்சியையும் -

படங்களில் காணலாம்.

*(படங்கள்:தேவராஜன்)*

## 2 ஆவது தேசிய விளையாட்டு விழா

# கிரிக்கெட், உதைபந்தாட்டத்தில் திருமலை அணி நேற்று சம்பியன்

கிளிநொச்சி.பெப்.26

கிளிநொச்சியில் நடைபெற்று வரும் 2ஆவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் ஆகியவற்றில் திருமலை மாவட்ட அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணங்களை சுவீகரித்தது.

கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் நேற்றுக்காலை நடந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் திருமலை மாவட்ட அணி 18 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

திருமலை - மட்டக்களப்பு அணிகள் இடையே இந்த ஆட்டம் நடந்தது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற திருமலை மாவட்ட அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 17.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 18 ஓட்டங்களால் வெற்றி பெற்ற திருமலை அணி வென்று கேணல் சங்கர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

திருமலை அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹரிஸ் 10 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இவ்வாட்டத்தில் பங்குபற்றிய வீரர்கள் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

விழாவின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இறுதி ஆட்டம் மாலையில் நடந்தது. மன்னார் - திருமலை மாவட்ட அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இந்த ஆட்டம் நடந்தது. ஆரம்பமாகிய 23 நிமிடத்தில் திருமலை மாவட்ட அணியைச் சேர்ந்த வாஷிஸ் ஒரு கோலை அடித்தார். இடைவேளை வரை எந்த அணியும் வேறு கோல் எதனையும் பெறவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. இதனால், திருமலை மாவட்ட அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட அணியைத் தோற்கடித்தது. லெப்.கேணல் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை தட்டிச்சென்றது.

இவ்வாட்டத்தின் ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் நியூட்டன் வீரர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்.

(ம-5-8-ரி)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வியாகுலம் முடியப்பு

தோற்றம் : 1931.10.21

மறைவு : 2001.02.26

திதி : 2003.02.26

என்றென்றும் மாறாத உன் நினைவால் எம் உள்ளம்

*சங்கரவத்தை,*
*கந்தரோடை, (உடுவில்)*

தகவல்: பிள்ளைகள் : தயா, தாசன்
மருமக்கள் : ஜெசி, ராணி
பேரப்பிள்ளைகள் : சுரேக்கா, ஜான்சி

(14972)


## சாவகச்சேரி நகரசபை
## 2003 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள்/ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*பொருள்கள்:*

1. காகிதாதிகள், எழுதுபொருள்கள்.
2. அலுவலக உபகரணங்கள் மற்றும் களஞ்சியப் பொருள்கள்.
3. கோலவுடைத் துணிகள்.
4. கட்டடப் பொருள்கள்.
5. நூலகங்களுக்குரிய நூல்கள்.
6. கணனி, போட்டோ பிரதி இயந்திரம் என்பனவற்றிற்கான உதிரிப்பாகங்கள்.

*சேவைகள்:*

1. அச்சிடுதல்.
2. தட்டச்சு இயந்திரம் திருத்துதல்.
3. வாகனம் திருத்துதல்.
4. ரயர் ஒட்டுதல்.
5. இறப்பர் முத்திரை தயாரித்தல்.
6. வாகனங்கள் சேவிஸ் செய்தல்.
7. கணனி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம், மின்பிறப்பாக்கி, றோனியோ இயந்திரம் திருத்தம், சேவிஸ் செய்தல்.

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பதிவுக் கட்டணம் ருபா.200/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 14.03.2003 ஆம் திகதிக்கு முன் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 24.02.2003 (C-26708)

செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.


## பிரயாவிடை வைபவம்

யாழ்ப்பாணம்,பெப்.26

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கடந்த 5 வருடங்களாக சனசமூக அபிவிருத்தி அதிகாரியாகக் கடமையாற்றி, இடமாற்றம் பெற்று, நெடுந்தீவு பிரதேச சபைக்கு சென்ற வே.கந்தசாமிக்கு நேற்று பிரதேச சபை 'ரவீந்திரன்' கலாசார மண்டபத்தில் பிரியாவிடை வைபவம் இடம்பெற்றது.

(ஐ)

## ஓமந்தைப் பகுதியில் இராணுவ வீரர் தற்கொலை!

வவுனியா,பெப்.26

வவுனியா, ஓமந்தை பரநாட்டான்கல் இராணுவ முன்னரங்க காவல்நிலை பகுதியில் இராணுவ வீரர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

திங்கள் இரவு, இவர் தற்கொலை செய்து கொண்டார் என இராணுவத்தினர் தெரிவித்தனர். இறந்தவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஜயரத்ன என்று இராணுவத்தினர் கூறினர்.

இப்பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்னரும் இராணுவச் சிப்பாய் ஒருவர் மரணமானார். இறந்தவரின் சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்ய வவுனியா வைத்தியசாலைக்கு வவுனியா பொலஸார் அனுப்பி வைத்துள்ளனர்.

(ஐ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை பராசக்தி

இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பராசக்தி கடந்த 22.02.2003 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலாயுதர் செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுசிலாதேவி, பரஞ்சோதி மற்றும் இராசமணி, செல்வம், இராஜேஸ்வரி, கண்ணதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கராசா, காலஞ்சென்ற வசந்தாதேவி மற்றும் சிறிகாந்தன், அம்பிகாபதி, குலத்திலகர், தமயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் கணேசபிள்ளை, சந்திரசேகரம்பிள்ளை, சுந்தர்லிங்கம், சிவசுப்பிரமணியம், தியாகராசா, கனகலிங்கம், பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நமசிவாயம், பெரியதம்பன், சுப்பிரமணியம், இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் தவபாலன் (சத்தியபாமா), அம்பிகைபாலன் (தேவா), கிரிசாலினி ஜெகதீஸ்வரன், தேவிகபாலன் (தர்சினி), வசந்தபாலன் (சந்திரகலா), சுஜிகலா, பாலசந்திரமோகன் (தாட்சாயினி), சந்திரகாசன், கார்த்திகாயினி, உமையாபதி, பிரதீஸ், தர்மாபதி, சர்மிளாபதி, கருணாகரன், துசிர்ரா, சங்கீதா, கோகிலன், லக்ஸ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விதூபன், விதுனா, புவனராஜ், துர்சாலினி, சங்கவி, பாலினி, சோபினி, பிரணவன், லக்ஷி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.02.2003) புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*மஞ்சத்தடி,*
*இணுவில்.* (14974)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## தாமோதரம்பிள்ளை இராசரத்தினம்

மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் நேற்று (25.02.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தாமோதரம்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் பிறேமாவதியின் அன்புக் கணவரும் யோகேஸ்வரன், சர்வேஸ்வரன் (உரிமையாளர், விநாயகர் புடைவையகம், யாழ்ப்பாணம்), கஜன், சுகந்தன், சுஷந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சரஸ்வதி, கமலாம்பிகை, சந்திரா, சிவயோகநாதன் (டென்மார்க்), சோமசேகரம் (சிறி, உடையார் கட்டு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி மற்றும் விவேகானந்தராஜா, சிவசுப்பிரமணியம், மலர்மணிதேவி (டென்மார்க்), புஷ்பகலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.02.2003) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு இல.22, இராசாவின்தோட்ட வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்கும்பான் சாட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.22,*
*இராசாவின்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (14971)

தகவல்:
தி.விவேகானந்தராஜா
(மைத்துனர்)

## கிறிஸ்தோப்பர் அன்னம்மா

மாதகல், பற்றிமா வீதியை பிறப்பிடமாகவும் முருங்கனை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் (இளையதம்பி) அன்னம்மா அவர்கள் நேற்று (25.02.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் மறைஆசிரியர் கி.பங்கிராஸ் (யாழ்.மறைக்கல்வி நடுநிலையம்), கி.பீற்றர் (மண்டைதீவு) ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

இவரது இறுதிச்சடங்குகள் இன்று (26.02.2003) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு முருங்கனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருங்கன் பிட்டி,*
*முருங்கன்.* (14973)

தகவல்:
கி.பங்கிராஸ் *(மகன்)*

## திருமதி சிவஞானம் இராசம்மா

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி சிவஞானம் இராசம்மா அவர்கள் நேற்று (25.02.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் கந்தையா - பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும் மற்றும் சந்திரசேகரத்தின் (அத்தான்) அன்புத் தாயாரும் புஸ்பராணியின் மாமியாரும் சுரேஸ்குமார் (மக்கள் வங்கி, பிரதான வீதி), துளசிகரன், மயூரி, பார்கவி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நடராசா, கந்தசாமி மற்றும் இராமாசிப்பிள்ளை, சிவஞானபிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2003) புதன்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாரந்தனை கிழக்கு,*
*ஊர்காவற்றுறை.* (14978)

தகவல்:
சி.சந்திரசேகரம் (மகன்)

# கல்வியில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் புறக்கணிப்பு; அவர்களுக்கு பாரபட்சம்!

நாடளாவிய ரீதியில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் கல்வியில் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகிறது. பாடசாலைகளை நிறுவுதல், வசதிகளை வழங்குதல் ஆகியவற்றில் மட்டுமன்றி ஆசிரியர்கள் நியமனத்திலும் ஏகப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் உள்ளன என புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் நிலைமை படுமோசம்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அம்பாறைக் கல்வி வலயத்தில் 35, 690 சிங்கள மாணவர்கள். அவர்களுக்கு 1,731 ஆசிரியர்கள். அதே வேளை, அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் 37, 206 தமிழ், முஸ்லிம் மாணவர்கள். அவர்களுக்கு 1,305 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கிறார்கள்.

இந்த இரண்டு கல்வி வலயங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் கூடியதொகை மாணவர்களுக்குக் குறைந்த எண்ணிக்கையில் ஆசிரியர்களும் குறைந்த எண்ணிக்கையில் உள்ள மாணவர்களுக்குக் கூடிய எண்ணிக்கையான ஆசிரியர்களும் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதும் தெரியவருகிறது.

அக்கரைப்பற்றுக் கல்வி வலயத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மாணவர்களைப் பார்க்கிலும் 1,516 சிங்கள மாணவர்கள் குறைவாகவே அம்பாறைக் கல்வி வலயத்தில் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களுக்கு 426 ஆசிரியர்கள் மேலதிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என புள்ளி விவரங்கள தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனைக் கல்வி மாவட்டம், அம்பாறை கல்வி மாவட்டம் என இரு கல்வி மாவட்டங்களும் உள்ளன.

கல்முனைக் கல்வி மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் பாடசாலைகளும் அம்பாறைக் கல்வி மாவட்டத்தில் சிங்களப் பாடசாலைகளும் அடங்கியுள்ளன.

கல்முனைக் கல்வி மாவட்டத்தில கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய 3 கல்வி வலயங்களும், அம்பாறைக் கல்வி மாவட்டத்தில் அம்பாறை, மஹாஓயா, தெஹியத்தகண்டி ஆகிய மூன்று கல்வி வலயங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகியோர் வாழ்ந்துவரும் அம்பாறை மாவட்டத்தில் கல்வி வலயங்களின் அடிப்படையில் பாடசாலைகள், மாணவர்கள், ஆசிரியர்கள் விவரம் வருமாறு:-

இந்தப் புள்ளி விவர அடிப்படையில் கல்முனைக் கல்விவலயத்தில் 37 ஆயிரத்து 101 மாணவர்களுக்கு 57 பாடசாலைகள். அதாவது, சராசரியாக 651 மாணவர்களுக்கு ஒரு பாடசாலை. அதேவேளை, மஹாஓயா கல்வி வலயத்தில் 9 ஆயிரத்து 950 மாணவர்களுக்கு 32 பாடசாலைகள். அதாவது, சராசரியாக 311 மாணவர்களுக்கு ஒரு பாடசாலை. (ஐ)

## புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய பொ.ஐ.மு. – ஜே.வி.பி. தீர்மானம்

கொழும்பு,பெப்.26

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதென தீர்மானித்துள்ளன. நேற்று இரு கட்சியினருக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற முக்கிய சந்திப்பில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் பொ.ஐ.முவின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரட்ண, ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம, நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரும் ஜே.வி.பி. சார்பில் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச செயலாளர் விமல் வீரவன்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் அநுர திஸாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இரண்டு கட்சிகளும் தனித்தனியாக ஒப்பந்தங்களைத் தயாரித்து அடுத்தவாரம் இரு கட்சியினருக்கும் இடையில் இடம்பெறவுள்ள சந்திப்பின் போது அவைகுறித்து கலந்தாலோசிப்பது என்றும் இணக்கம் காணப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் தத்தமது கட்சியின் மத்திய குழுவுக்கு சமர்ப்பித்து அதன் அனுமதியைக் கோருவது என்றும், அதன பின்னர் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அதன்படி இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படுவதென்றும் பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

## நமது வீரர்கள் சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே பாப்பா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :- தமிழீழத்தில் உள்ள சகல மாவட்டங்களையும் சேர்ந்த மூவின மக்களும் ஒரே கொடியின் கீழ் ஒன்று சேர்ந்து இந்த விளையாட்டு விழாவை நடத்தி முடித்திருக்கின்றனர். இதன் மூலம் தமிழீழத்தின் ஐக்கியம் சர்வதேசங்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இன்று நாம் எவ்வாறு ஒன்றுபட்டு எமது ஒற்றுமையை வெளி உலகுக்கு பறைசாற்றியுள்ளோமோ அதே நிலை எதிர்காலங்களிலும் தொடரவேண்டும்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள போர் ஓய்வுச் சூழலானது நிரந்தரமானதா; அல்லது தற்காலிகமானதா என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. இந்த நிலையில் எதிர்வரும் காலங்களிலும் எந்த இடர்கள், தடைகள் ஏற்பட்டாலும் தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவைத் தொடர்ந்து நடத்த வேண்டும். அதற்கு அனைத்துத் தரப்பினரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இப்போட்டிகள் எமது மண்ணில் சர்வவேச விதிமுறைகளுக்கமைய சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளன. இந்த நிகழ்வுகள் இந்த மண்ணில் சிறப்பாக நடைபெற்றமைக்கு எமது மாவீரர்களின் தியாகமும் அவர்களின் சாதனைகளுமே காரணம் என்பதனை அனைவரும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழீழத்தின் சகல நிர்வாகக் கட்டமைப்பையும் எமது தேசியத் தலைவர் எவ்வாறு வளப்படுத்தி வளர்த்து வருகிறாரோ அதேபோல எமது மண்ணில் விளையாட்டுத்துறையையும் வளர்த்தெடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றார்.

"சிங்கள மக்கள் நிரந்தரமாக வாழ்ந்துவரும் இடங்களிலிருந்து ஓர் அங்குல நிலத்தைக்கூட நாங்கள் பறித்தெடுக்கமாட்டோம்" என்று சிங்கள மக்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார் பாப்பா.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.இராசநாயகம் உரையாற்றுகையில் -

கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கை சர்வதேச தரம் வாய்ந்த ஒரு மைதானமாக மாற்றி அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றேன்.

இது தொடர்பாக நான் அரசுத் தரப்பினருடன் கலந்துரையாடியபோது அவர்களும் இந்த மைதானத்தைப் புனரமைப்பதற்கு வேண்டிய நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளனர். அந்த நிதியைக்கொண்டு விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் இந்த மைதானத்தைப் புனரமைத்து வெகு விரைவில் விளையாட்டு வீரர்களின் கைகளில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன் - என்றார்.

இறுதிநாளான நேற்றுக்காலை நிகழ்ச்சிகள் தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகின.

தேசியக்கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைத்தார். தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த மாவீரர் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த மாவீரர் கேணல் சங்கரின் திருவுருவப் படத்திற்கு வடக்கு - கிழக்கு முன்னாள விளையாட்டு உதவிப் பணிப்பாளர் எஸ்.சீவரட்ணமும், லெப்.கேணல் விக்ரரின் உருவப்படத்துக்கு மட்டு மாவட்ட விளையாட்டு அதிகாரி ஈஸ்வரனும், மேஜர் சோதியாவின் உருவபடத்துக்கு கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி எஸ்.குமாரும் -

மேஜர் அல்பேட்டின் உருவப் படத்துக்கு கிளிநொச்சி கண்ணகிபுரம அ.த.க.பாடசாலை அதிபர் பரஞ்சோதியும் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர்.

போட்டிகளில் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்ட வீரர்களின் விவரம் வருமாறு:-

கரப்பந்தாட்டம் : கமலேந்திரன் மகிதரன் (யாழ். மாவட்டம்)

வலைப்பந்தாட்டம் : திருச்செல்வம் சங்கீதா (யாழ். மாவட்டம்)

உதைபந்தாட்டம் : தர்மபாலன் - சாள்ஸ் வசந்தன் (திருமலை மாவட்டம்)

கிரிக்கெட் : எஸ்.ஹரிஷ் (திருமலை மாவட்டம்)

(ஐ-5-8-ரி)

## அனுராதபுரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருகிப் பலியானார்.

காலை 9 மணியளவில் இரும்புப் பொருள்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றில் ஏற்பட்ட தீ பரவியதால் ஐந்து கடைகள் எரிந்து நாசமாகின.

தீ விபத்துக்கான காரணத்தை அறிய பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-3)

## மண்ணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர். பெருமளவு வளமான பிரதேசங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு பெரும் உயிர்கள், உடைமைகளையும் பெரும் அவலங்களையும் விலையாகக் கொடுத்துத்தான் இன்றைய திருப்பு முனைக்கு வந்துள்ளோம். ஆகவே, எங்களின் தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் சாதாரணமாக நினைத்துவிடக்கூடாது.

இன்றைய சூழ்நிலை உருவாவதற்கு தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் நிறைந்த விடுதலைப் போராட்டம்தான் காரணம் என்பதை எமது மனதில் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

எங்களது நிலத்தில் விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தி அழிக்க எதிரி எவ்வளவோ முனைநது நின்றும்கூட எமது தேசியத் தலைவரும், போராளிகளும், மக்களும் காட்டிய உறுதிப்பாடும் அர்ப்பணிப்பும் இன்று எம்மை உலகில் தலைநிமிர வைத்துள்ளது - என்றார். (ஐ-3-ரி)


நாகம்ஸ் சுன்னாகம்.

ஷாம், மீராஜஸ்மின், ரகுவரன், P. வாச நடித்த

காட்சி நேரம் தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.தெ.)

அடுத்த வெளியீடு ஏப்ரல் மாதத்தில்

விஜய், சிம்ரன் நடித்த

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00

M.I.2

ராஜா யாழ்ப்பாணம்

7 ஆவது ஜனத்திரள் வாரம்

விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

வசீகரா

2.30, 6.30

கொழும்பில் பல வாரங்கள் காண்பிக்கப்பட்ட

விஞ்ஞான அறிவியலூட்டும் திரைச்சித்திரம்

SPIDERMAN

இன்று மட்டும் காலை 10.30, இரவு 9.30


## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனவா என்பதை பகுப்பாய்வு செய்து கண்டுபிடித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இராணுவத் தலைமையகம் கையளித்த துப்பாக்கிகள் ஆயுதக் கையளிப்பின்போது ஈ.பி.டி.பியினரால் இராணுவத்திடம் வழங்கப்பட்ட துப்பாக்கிகள்தானா என்பதை உறுதிப்படுத் தும் ஆவணங்களை அடுத்த தவணை யின்போது நீதிமன்றத்தில் சமர்ப் பிக்க வேண்டும் என்றும் நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-3-10)

## இராஜதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி, கொழும்புக்கான பிரிட்டனின் உயர்ஸ்தானிகர் ஸ்டீபன் இவான்ஸ் ஆகியோர் இந்தப் பன்னாட்டு இராஜதந்திரிகளின் பட்டியலில் அடங்குகின்றனர்.

அன்ரன் பாலசிங்கம் வன்னியில் இருக்கும் சமயம் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.களுக்கும் புலிகளுக்கும் இடையிலான மற்றொரு சுற்றுச் சந்திப்பு வன்னியில் இடம்பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பாலசிங்கம் சுமார் 10 நாள்கள் வன்னியில் தங்கியிருந்தபின் ஜப்பானில் மார்ச் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கு புலிகளின் பேச்சுக்குழுவுடன் கொழும்பு ஊடாக ஜப்பான் செல்வார். (ஐ-3)

## 500 விக்கெட்டுகள்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு எதிராக கேப்டவுனில் நடைபெற்ற ஆட்டத்தின்போது இச்சாதனையை நிலைநாட்டுவார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அன்றைய போட்டியில் அவர் ஒரு விக்கெட் மட்டுமே வீழ்த்தினார்.

இதனால், 499 விக்கெட்டுகள் என்ற நிலையில் நின்ற அவர் நேற்று தனது சாதனையைப் பூர்த்தி செய்தார்.

34 வயதான வஸிம் அக்ரம் இதுவரை 354 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி 500 விக்கெட்டுகளையும் டெஸ்ட் போட்டிகளில் 400 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். (ம-5)

## சுப்பர் சிக்ஸ் ....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையிலான துடுப்பாட்ட வரிசை சாதிததாகவேண்டும். ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடக்கும் ஆட்டம் பொறுப்பாக ஆடவில்லையெனில் பொறுமையிழந்து போவார்கள் ரசிகர்கள்.

மறுபுறத்தில் உலகக் கிண்ணப் போட்டிகளில் எந்த ஒரு ஆட்டத்திலும் இந்திய அணியிடம் வெற்றிபெறாத பாகிஸ்தான் இம்முறை வட்டியும் முதலுமாக சேர்த்துக் கொடுப்பதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றது. எனவே இன்று நடைபெறுகின்ற ஆட்டத்தில் எப்படிப்பட்டாவது வெல்ல வேண்டிய தேவையுள்ளது.

பெரும் எண்ணிக்கையான இந்திய வம்சாவளியினரைக் கொண்ட டேர்பன் நகரில் இவ்வாட்டம் நடைபெறுவது இந்திய அணிக்கு சாதகமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இரு அணிகளும் இறுதியாக இங்கிலாந்தில் நடைபெற்ற நட்வெஸ்ட் கிண்ணத் தொடரில் மோதியுள்ளன. அப்போட்டியில் இங்கிலாந்து அணி 326 ஓட்டங்களைப் பெற்றபோதும் அந்த இலக்கை துரத்திப் பிடித்து இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இலங்கையில் நடைபெற்ற ஐ.சி.சி. மினி உலகக் கிண்ணத் தொடரிலும் இங்கிலாந்தை இந்தியா வென்றுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்து - இந்திய அணிகள் 5 தடவைகள் மோதியுள்ளன. இவற்றில் இங்கிலாந்து 3 தடவைகளும், இந்தியா இரு தடவைகளும் வெற்றியீட்டியுள்ளன.

எது எவ்வாறு இருப்பினும் இன்று நடைபெறும் ஆட்டத்தில் எந்த அணி வெற்றி பெற்று 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்துக்கு தெரிவு செய்யப்படும் என்பது இன்னும் 24 மணிநேரத்தில் தெரிந்துவிடும். (ம-5)

## இங்கிலாந்துக்கு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணியில் துடுப்பாளர்கள் மற்றும் பந்துவீச்சாளர்களின் வீதங்கள் சரியாகவே இருந்தது. தற்போது உள்ள 15பேரும் மிகவும் சிறந்தவர்கள். நாம் நன்றாகவே விளையாடிக்கொண்டிருக்கின்றோம். இன்சமாம் தற்போதைய ஆட்டங்களில் சிறப்பாக ஆடவில்லை. என்றாலும் அவர் மிகச் சிறந்த துடுப்பாளர். அவர் மிக விரைவில் தன் திறனை வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

இங்கிலாந்துடன் 247 என்ற இலக்கு எம்மால் முடியக்கூடிய ஒன்று என்றே நினைத்தேன். ஆனால், இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பாக வீசினர். குறிப்பாக அண்டர்ஸனின் பந்து வீச்சு மிக அபாரமாக இருந்தது - என்றார்.

வெற்றி குறித்து ஹுசைனின் கருத்து:-

நாங்கள் பாகிஸ்தான் அணியையே வென்றுள்ளோம். உலகக் கிண்ணத்தை அல்ல.

கடந்த பல மாதங்களாக சுமாராகப் பந்துவீசி வந்த எமது அணி வீரர்கள், பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் அற்புதமாக வீசினார்கள். குறிப்பாக அண்டர்ஸனின் பந்துவீச்சு மிகச் சிறப்பாக இருந்தது. இப் போட்டித் தொடரில் நாங்கள் சந்தித்துள்ள அணிகளுள் வலிமையானது பாகிஸ்தான். அவர்கள் எந்த அணியையும் தோற்கடிக்கும் வல்லமை வாய்ந்தவர்கள் - என்று கூறினார். (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா கோபாலபிள்ளை

புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தை சேர்ந்தவரும் 55 A, அரசடி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி யோகம்மா கோபாலபிள்ளை அவர்கள் நேற்று (25.02.20003) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பையா தம்பதிகளின அன்பு மகளும் திரு.திருமதி நாகமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் நாகமணி கோபாலபிள்ளை அவர்களின் அன்புத் துணைவியாரும் சிவஞானவதி, பரஞானவதி, சிவானந்தபாலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற MLT), தில்லைநாதன் (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்), நவரத்தினேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் இராஜநாயகம் (லண்டன்), பிரபாகரன் (சுவிஸ்), முகுந்தன் (பிரான்ஸ்), அருளானந்தன் (சுவிஸ்), பிரதீபன், இராகவன் (லண்டன்), குமுதினி, வாகினி, சுமந்தினி (இந்தியா), கிருபாலினி (லண்டன்), உமா (சுவிஸ்), கிரிஜா (பிரான்ஸ்), ஹம்சா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மதுசன், அபிஷேக், கிளௌடியா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.02.2003) புதன்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*55 A, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
கோ.சிவானந்தபாலன் (மகன்),
கா.தில்லைநாதன் (மருமகன்)
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்).

(14977)

## துயர் பகிர்கின்றோம்

சமூக சேவையாளரும், தேசப்பற்றாளருமாகிய

### தாமோதிரம்பிள்ளை இராசரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்கி அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிராம உத்தியோகத்தர் அலுவலகம்,
மண்கும்பான்.

(14976)

# புலிகளின் அரசியல் விவகாரக்குழு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம்!

## சமஷ்டி முறை பற்றி ஆராய்வதற்கு

லண்டன்,பெப்.26

ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையில் உள்ள ஆட்சி வகைபற்றி அறிந்துகொள்ளும் பொருட்டு புலிகளின் 15 பேர் அடங்கிய அரசியல் விவகாரக் குழு ஒன்று நோர்டிக் நாடுகளுக்கும், ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, ஸ்பெயின் ஆகியவற்றுக்கும் விரைவில் விஜயம் செய்யவுள்ளது.

இந்தக் குழுவின் விஜயத்துக்கு முன் கனடா, ஒட்டாவா மாநிலத்திலுள்ள சமஷ்டி அமைப்புகளின் கூட்டமைப்பு என்ற தன்னார்வத்தொண்டு என்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

அரசுக்கும் புலிகளுக்கும் சமஷ்டி ஆட்சிக் கட்டமைப்புக் குறித்து ஆலோசனை வழங்கிவரும் இக்குழு வன்னிக்கும் வருகை தந்து புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசும். (ஐ-3)

# உபகுழுவின் கூட்டம் வெள்ளியன்று மட்டுநகரில்

கொழும்பு,பெப்.26

இயல்பு நிலையை ஏற்படுத்துவது தொடர்பான உப குழுவின் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மட்டக்களப்பு சூனியப் பிரதேசத்தில் உள்ள வவுணதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் அரச தரப்புப் பிரதிநிதிகள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையிலும் விடுதலைப்புலிகள் தரப்பு பிரதிநிதிகள் கேணல் கருணாவின் தலைமையிலும் கலந்துகொள்ளவுள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயம், மீள் குடியமர்வு, போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிக்கல்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும்.

### பொதுநலவாய செயலாளர்நாயகம் வருகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.26

பொதுநலவாய அமைப்புக்களின் செயலாளர்நாயகம் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

நாளை முற்பகல் 11 மணிக்கு வரும் அவர் யாழ்.நூலகத்தைப் பார்வையிடுவார். யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றுவார். (ஐ-3)

### கலந்துரையாடல்

சர்வோதய அமைப்பின் அனுசரணையுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கலந்துரையாடல ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி நடத்தப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் அதிபர், ஆசிரியர்கள், கிராமசேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமாதான நீதிவான் ஆகியோர் உள்ளடங்கும்படி ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் 10 பேர் வீதம் 5 கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் மொத்தமாக 50 பேரை தெரிவு செய்து அனுப்பி வைக்குமாறு சர்வோதய அமைப்பின் முதுநிலை நிறைவேற்று உதவியாளர் எஸ்.பி.சங்கரப்பிள்ளை பிரதேச செயலர்களை கேட்டுள்ளார்.(3 - 76)

# தேர்தல்கால சம்பவங்கள் பதியும் குறிப்பேடு வழக்குக்காகத் தயார் பண்ணப்பட்டதல்ல!

## உடதலவின்ன படுகொலை வழக்கில் சாட்சி

கொழும்பு,பெப்.26

தேர்தல் காலச் சம்பவங்களைப் பதியும் பொலீஸ் குறிப்பேட்டில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் குளறுபடிகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அந்தக் குறிப்பேட்டில் நான் கையெழுத்திடும்போது அதில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

உடத்தலவின்ன படுகொலைகள் வழக்கு விசாரணையில் நேற்று சாட்சியமளித்த மேஜர் சமரக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளருடன் சேர்ந்துதான் இந்தக் குறிப்பேட்டைத் தயாரித்தீர்களா? என்று எதிர்த்தரப்பு சட்டத்தரணி அனில் சில்வா சாட்சியிடம் கேட்டபோது இது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் இந்தக் குறிப்பேடு வழக்குக்காகத் தயாரிக்கப்படவில்லை. தேர்தல் காலத்தில் இடம்பெறும் சிறு சிறு சம்பவங்களை எதிர்காலத்தில் தெரிந்துகொள்வதற்காகவே தயாரிக்கப்பட்டது என்றும் - சாட்சி பதிலளித்தார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் எரிக்பஸநாயக்கா (தலைவர்), தீபாளி விஜயசுந்தர, சுனில் ராஜபக்ஷ ஆகியோர் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேஜர் சமரக்கோன் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

நிர்வாகத் துறையில் எனக்கு விசேட பயிற்சி இருக்கவில்லை. படைபணிகளுடன் போர்முயற்சிகளில்தான நான் அதிகம் கவனம் செலுத்தி வந்தேன். இந்த முகாமுக்கு வந்தபின்பு தான் நிர்வாகத்துறையில் சிறிது சிறிதாக ஈடுபடத் தொடங்கினேன்.

பிரிகேடியர் தம்மிக்கவும், நானும் உபயோகித்த இந்தக் குறிப்பேட்டில் சில குறைபாடுகள் இருக்கின்றதென தெரிந்துகொண்டேன். ஆனால், அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது - என்றார்.

லெப்டினன்ட் விஜயரட்ண, போயகன முகாமிற்கு வந்தது பற்றி - அவர் ஏன் வந்தார் என்பது பற்றி - உமக்கு தெரியுமா? அது பற்றி ஏதும் விசாரித்துப் பார்த்தீரா என எதிர் தரப்புச் சட்டத்தரணி கேள்வி எழுப்பினார்.

அதற்கு சாட்சி பதிலளிக்கையில் - லெப்டினன்ட் விஜயரட்ண படைநகர்வு அனுமதிப்பத்திரத்துடன் முகாமுக்கு வந்தார் எனத் தெரிந்து கொண்டேன். அவர் ஏன் வந்தார் என நான் விசாரிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

மேல் விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

(ஐ-3)

## World Cup Score card - 2003



ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222-5408


நாணயச் சுழற்சி: ஹொலண்ட்

ஆட்டநாயகன்: யூசுப் யுஹானா (முடிவு 97 ஓட்டங்களால் பாகிஸ்தான் வெற்றி)

### பாகிஸ்தான்

| | | | | துடுப்பாட்டம் |
|---|---|---|---|---|
| தௌபிக் உமர் | run out | | .... | 48 |
| சயீட் அன்வர் | c/ஈஸ் மேஜர் | b/டி லீட் | .... | 25 |
| அப்துல் ரஸாக் | c/சிமிற்ஸ | b/பன்ஞ் | .... | 47 |
| இன்ஸமாம் | lbw | b/டி லீட் | .... | 00 |
| யூசுப் யுஹானா | | b/லெப்ரோவ் | .... | 58 |
| சலீம் இலாகி | c/ஸ்யய்ன்டெறன்ட் | b/பன்ஞ் | .... | 05 |
| ரஷீட் லத்தீப் | c/பன்ஞ் | b/ஷிபேர்லி | .... | 24 |
| வஸீம் அக்ரம் | run out | | .... | 01 |
| சொஹைப் அக்தர் | not out | | .... | 26 |
| வக்கார் யூனுஸ் | c& b/மோர்ல் | | .... | 01 |
| சக்லைன் முஷ்டாக் | not out | | .... | 03 |
| *உதிரிகள்* | | | .... | 15 |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | .... | 253/9 |

பந்துவீச்சு

ஷிபேர்லி: 10-1-48-1, லெப்ரோவ்: 10-1-39-1, டி லீட்: 10-0-53-2, வான் ட்ருஸட்: 2-0-18-0 ஈஸ் மேஜர் : 10-0-35-0, பன்ஞ் : 4-0-27-2, மோர்ல் : 4-0-24-1.

### ஹொலண்ட்

| | | | | துடுப்பாட்டம் |
|---|---|---|---|---|
| என் ஸ்டதம் | | b/அக்ரம் | .... | 00 |
| ஷிபேர்லி | c/ரஸாக் | b/அக்தர் | .... | 09 |
| ஸ்யய்ன்டெறன்ட் | lbw | b/வக்கார் | .... | 08 |
| வான்நூர்த் விக் | c/லத்திப் | b/அக்ரம் | .... | 07 |
| டி லீட் | c/அக்தர் | b/சக்லைன் | .... | 15 |
| வான் பன்ஞ் | c/லத்திப் | b/ரஸாக் | .... | 31 |
| வான் ட்ருஸ்ட் | c/லத்திப் | b/அக்தர் | .... | 22 |
| எச் மோர்ல் | | b/அக்தர் | .... | 13 |
| ஈஸ் மேஜர் | lbw | b/அன்வர் | .... | 00 |
| லெப்ரோவ் | not out | | .... | 04 |
| சிமிற்ஸ் | lbw | b/அக்ரம் | .... | 07 |
| *உதிரிகள்* | | | .... | 40 |
| மொத்தம் | (29.3 ஓவர்கள்) | | .... | 156/10 |

பந்துவீச்சு

அகரம்: 8.3-2-24-3, அக்தர்: 7-0-26-3, வக்கார் : 6-1-19-1, சக்லைன் : 8-2-32-1, ரஸாக் : 8-0-23-1 அன்வர் : 4-0-15-1

### இன்றைய ஆட்டங்கள் - பெப். 26

| | | | | |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | Vs | பங்களாதேஷ் | கிம்பர்லி | 2.00p.m. |
| இங்கிலாந்து | Vs | இந்தியா | டேர்பன் | 6.30p.m. |

# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 08 08 1919



மறைவு: 28 01 2003

அமரர்

## திருமதி சுப்பிரமணியம் மாணிக்கம்

*(வாரிவளவு, காரைநகர்)*

28.01.2003 அன்று சிவபதமடைந்த எங்கள் அம்மாவின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக நேரில் வருகை தந்தோருக்கும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (27.02.2003) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பாக
மகன் சு.சோமசுந்தரம் (மணியண்ணை)
இ.சுப்பிரமணியம் அன் கோ
(பிள்ளையார் சைக்கிள் பலஸ்), சுன்னாகம்.

வாரிவளவு,
காரைநகர்.

(C/26679)


LIONAIR

FLY LIONAIR TO COLOMBO JAFFNA

Safely and in comfort


For Reservations:

Lionair Ticket Office Jaffna
# 1-T, Stanley Road,
Jaffna.
Tel: 0777 - 733992

(C/26688)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புஷ்ஷுடன் பகிரங்க விவாதத்துக்கு தயார்! சவால் விடுக்கின்றார் ஈராக் அதிபர் சதாம்!!



பக்தாத்,பெப்.26

ஈராக் விவகாரம் தொடர்பாக தொலைக்காட்சியில் அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் பகிரங்க விவாதம் நடத்த தான் தயார் என்று தெரிவித்துள்ளார் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன். கடந்த ஒரு தசாப்த காலத்தில் முதற்றடவையாக அவர் அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவருக்கு பேட்டி அளித்தார். அதில் "உங்களுடைய அதிபருடன் தொடர்புகொண்டு நேரடியாகப் பேச நான் தயார். எனக்கு என்ன வேண்டும் என்பதை நான் சொல்கின்றேன். அவருக்கு என்ன வேண்டும் என்பதை அவர் கூறட்டும்." - என்றார் சதாம்.

சி.பி.எஸ். என்ற அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றின் செய்தியாளரான டான் ராதர் என்பவருக்கு அளித்த பேட்டியிலேயே சதாம் இப்படிக் கூறினார். செய்மதி தொலைத்தொடர்பு மூலம் அவர் பக்தாத்தில் இருந்தவாறு அமெரிக்காவில் இருந்த பத்திரிகையாளருடன் பேசினார்.

மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் ஈராக் தன் வசம் உள்ள ஏவுகணைகளை அழித்துவிட வேண்டும் என்று ஐ.நா. ஆயுதப் பரிசோதனைக் குழுத் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ் விதித்த நிபந்தனையை ஏற்க ஈராக் அதிபர் மறுத்துவிட்டார். இந்தப் பேட்டியின் போது அவர் அதனை தெளிவாகத் தெரிவித்தார். ஐ.நாவின் கோரிக்கை ஏற்கமுடியாததொன்று என்றும் அவர் கூறினார்.

ஈராக் நடுத்தரத் தூர ஏவுகணைகளை உற்பத்தி செய்வதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை அனுமதித்திருந்தது. ஆனால், ஈராக் உற்பத்தி செய்த அல்ஷமுட்II ரக ஏவுகணைகள் ஐ.நாவால் அனுமதிக்கப்பட்ட அளவைவிட சிறிய அளவில், கூடுதலான தூரத்துக்குச் சென்று தாக்கும் திறன் வாய்ந்தவை என ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் கூறுகின்றனர். அத்துடன் அந்த ஏவுகணைகள் காவிச் செல்லக் கூடிய குண்டுகளின் நிறையின் அளவும் ஐ.நா. வரையறுத்ததைவிட அதிகமாக இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே அந்த ஏவுகணைகள் அழிக்கப்படவேண்டும் என்பது ஆயுதப் பரிசோதனைக் குழுத் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸின் கோரிக்கை.

ஆனால், இது ஒரு புறக்கணிக்கத் தக்க மீறல் மட்டுமே என்று ஈராக் கூறுகின்றது. அந்த ஏவுகணைகள் ஐ.நாவின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே உருவாக்கப்பட்டவை. ஐ.நா. குறிப்பிட்ட அளவுகளிலும் பார்க்க சிறிது கூடுதலான அளவுகளையே அவை கொண்டுள்ளன. எனவே அவற்றை அழிக்கமுடியாது என்று ஈராக் தெரிவிக்கின்றது.

"எமது அல்-ஷமுட் II ஏவுகணைகள் ஐ.நாவின் வரையறைகளை மீறவில்லை. எனவே அவற்றை அழிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. அவ்வாறு அவற்றை அழிப்பதாக உறுதி தரமுடியாது" - என்றார் சதாம்.

அதிபர் புஷ்ஷை பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்த சதாம் "ஈராக் மீது போர் தொடுப்பதல் உறுதியாக உள்ள புஷ், இந்த விவாதத்தின் மூலம் தனது தரப்பு நியாயத்தை உலக நாடுகள் மத்தியில் நியாயப்படுத்தி போரை ஆரம்பிக்கட்டுமே. அதற்கு உதவியாக இருக்குமே இந்த விவாதம்.



"அமெரிக்க மக்கள் மீதுள்ள மரியாதை, ஈராக் மக்கள் மீதுள்ள மரியாதை, உலக மக்கள் மீதுள்ள மரியாதை என்பன காரணமாகவே இக் கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன். போர் என்பது விளையாட்டான - பரிகாசத்துக்குரிய - விடயம் அல்ல. எனவே விவாதம் நடத்த புஷ் முன்வரவேண்டும்." - இவ்வாறு சதாம் மேலும் தெரிவித்தார். (ம)

# அமெரிக்க இராணுவ ஹெலி குவைத்தில் நொறுங்கியது!

## 4படையினர் பலி!!

குவைத் சிற்றி,பெப்.26

குவைத்தில் இரவு நேரப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான 'பிளக் ஹவக்' ரக தாக்குதல் ஹெலி ஒன்று விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொறுங்கியதில் அதில் இருந்த 4 அமெரிக்கப் படையினரும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தின் வடபகுதியில் உள்ள அமெரிக்கத் தளம் ஒன்றில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஈராக் மீதான போருக்கான தயார்ப்படுத்தல்களுக்காக இந்தத் தளத்தில் ஆயிரக்கணக்கான அமெரிக்கத் துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். உயிரிழந்த படையினரில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களை அடையாளம் காணும் பணி தொடர்வதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

'பிளக் ஹவக்' ஹெலிகள் அமெரிக்க இராணுவத்தில் பல்தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுபவை. வெளி இணைப்பு ஆயுதங்களைப் பொருத்தக்கூடிய வசதி கொண்டவை. 4 விமானிகள் மற்றும் 12 பயணிகளை ஒரே நேரத்தில் ஏற்றிச் செல்லக் கூடியவை.

அமெரிக்க இராணுவத்தில் உள்ள ஹெலிகளில் முக்கியமானவை இந்த ரக ஹெலிகள். எதிரியின் பிரதேசங்களுக்குள் வேகமாக நகர்வதற்கும், துருப்புக்களை தரையிறக்கும் அல்லது மீட்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கும் மற்றும் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் வகையிலும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.



'பிளக் ஹவக்' ரக தாக்குதல் ஹெலி

# ஈராக்குக்கு எதிரான தீர்மானம்; ஆதரவு திரட்டுவதில் சிரமங்கள்

## அமெரிக்காவும் பிரிட்டனும் நெருக்கடிக்குள்

நியூயோர்க்,பெப்.26

ஈராக்குக்கு எதிராகப் போர் தொடுப்பதற்கு ஐ.நாவின் அனுமதியைப் பெறும் விடயத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளன. ஏனைய நாடுகளிடம் இருந்து ஆதரவு பெறுவதில் பெரும் நெருக்கடி நிலையை அவை எதிர்கொண்டுள்ளன.

ஈராக்மீது இராணுவ பலத்தைப் பிரயோகிப்பதற்கு அனுமதி வழங்கக் கோரும் தீர்மானம் ஒன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கடந்த திங்களன்று பிரிட்டன் சமர்ப்பித்தது.

ஆனால், இந்தத் தீர்மானத்தை ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மன், சீனா ஆகியவை எதிர்க்கின்றன. தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கவேண்டாம் என பாதுகாப்புச் சபையின் ஏனைய நாடுகளை பிரான்ஸும் ஜேர்மனியும் வலியுறுத்தி வருகின்றன.

இதனையடுத்து அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின்(இவை மூன்றும் தீர்மானத்துக்கு ஆதரவான நாடுகள்) கூட்டணிக்கும் பிரான்ஸ், ஜேர்மன் (தீர்மானத்துக்கு எதிரான நாடுகள்) கூட்டணிக்கும் இடையில் ஒரு ராஜய ரீதியான போர் ஆரம்பமாகியுள்ளது. அடுத்துவரும் இருவாரங்களுக்குள் தத்தம் தரப்புகளுக்கு ஆதரவு திரட்டுவதில் இரு பகுதிகளும் மிகத்தீவிரமாக உள்ளன.

### அடுத்த கட்டங்கள்

பெப்.28 - ஆயுதப் பரிசோதனைக்குழுத் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ் பாதுகாப்புச் சபையில் எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிப்பார்.

மார்ச்1 - ஏவுகணை அழிப்பு கட்டாயம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மார்ச்7 அளவில் - கண்காணிப்பாளர்கள் பாதுகாப்புச் சபையில் வாய்மொழி மூலம் அறிக்கை தருவர்.

மார்ச்10 - தமது தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்புக்கு அமெ., பிரிட்டன் நிர்ப்பந்திக்கும்.

இந்த விவகாரம் குறித்து தனது கட்சிக்குள் சந்தேகம் கொண்டுள்ளவர்களுக்கு பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் இன்று விளக்கமளிக்கவுள்ளார். பாதுகாப்புச் சபையில் பிரிட்டன் எவ்வாறு வாக்களிக்கும் என்றும் அவர் அங்கு கூறுவார்.

இதேவேளை -

துருக்கிய அமைச்சரவை, அமெரிக்காவுக்கு ஆதரவான தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது. ஈராக்குக்கு எதிரான எந்தவொரு தாக்குதலுக்கும் தன் வடமுனைப்பகுதியை அமெரிக்கத் துருப்புகள் தளமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அந்தத் தீர்மானம் கூறுகின்றது.

திங்களன்று ஈராக்குக்கு எதிரான இரண்டாவது தீர்மானத்தைப் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்துப் பேசிய ஐ.நாவுக்கான பிரிட்டிஷ் தூதுவர் சேர் ஜேர்மி கிறீன்ஸ்டொக், "இந்த விடயத்தில் பிரிட்டன் சாதகமான ஒரு பதிலை எதிர்பார்க்கின்றது. ஆனால், அதற்காக நீண்டகாலம் எடுக்கப்படக் கூடாது" - என்றார்.

ஆயுதக் கண்காணிப்பாளர்கள் விடயத்தில் ஈராக் "மீண்டும் தன் பழமையான பாணியிலேயே நடந்துகொண்டுள்ளது" என்ற ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் கூறினார். "திரும்பவும் ஈராக் தன் பாணியில் நடந்துகொள்ள பாதுகாப்புச் சபை நிச்சயம் இடமளிக்கக்கூடாது" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தத் தீர்மானத்தை பாதுகாப்புச் சபையில் நிறைவேற்ற வேண்டும் என்றால் 15 உறுப்பு நாடுகளில் 9 நாடுகள் ஆதரவு வழங்கவேண்டும். அதுவும் நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்தில் எந்தவொரு நாடும் தன் 'வீற்றோ' அதிகாரத்தைப் பயன்படுத்தாமலிருக்கவேண்டும். (ம)

### பாதுகாப்புச் சபையில்...

இரண்டாவது தீர்மானத்திற்கு

*ஆதரவு* - அமெ., பிரிட்டன், ஸ்பெயின் மற்றும் பல்கேரியா

*எதிர்ப்பு* - பிரான்ஸ், ரஷ்யா, சீனா,ஜேர்மனி மற்றும் சிரியா.

*சந்தேகத்தில்* - அங்கோலா, கெமரூன், சிலி, மெக்ஸிக்கோ, கினியா மற்றும் பாகிஸ்தான்.


# ASIAN COMPUTER SYSTEMS

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 [illegible]77

Diploma in Computer Software Engineering

தமிழில் விளக்கங்களுடன் டிப்ளோமா பாடநெறிகளுக்கு புதிய பிரிவுகள் இவ்வாறும் ஆரம்...

Professional Diploma in Graphic Design

அனைத்து பாடநெறிகளுக்கும் இலவச பாடநூல்கள்

Diploma in Computer Programming

Microsoft Office XP

Diploma in Desktop Publishing

Diploma in Web Design



விபரங்களுக்கும் இலவச கல்வி ஆலோசனைகளுக்கும் எமது பயிற்சி மையத்தை நாடுங்கள்


# வடகொரியா திடீரென ஏவுகணை சோதனை

## தென்கொரிய அதிபர் பதவியேற்க முன் சம்பவம்

சியோல்,பெப்.26

ஜப்பான் மற்றும் கொரியக் குடா பகுதிக் கடலில் வடகொரியா நேற்று ஏவுகணைப் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டுள்ளது. தென் கொரியாவின் புதிய அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட ரோ மூ-ஹூனின் பதவியேற்பு வைபவம் நடைபெறுவதற்கு ஒரு மணிநேரம் முன்பாக இந்த ஏவுகணை ஏவப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

தென்கொரியாவின் கிழக்குக் கடல் பகுதியில் இந்த ஏவுகணை வீழ்ந்துள்ளது.

தரையில் இருந்து கடல் கலங்களை நோக்கி ஏவுவதற்கான குறுந்தூர (60 கிலோ மீற்றர்) தாக்குதல் திறன் கொண்ட ஏவுகணையே ஏவப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தென் கொரியத் தலைவர் ரோ தன் பதவியேற்பு உரையின் போது எதுவும் குறிப்பிடவில்லை.

வடகொரியாவால் ஏவப்பட்டது மிகப் பழைய ஏவுகணைகளில் ஒன்று. அது ஏன் இப்போது ஏவப்பட்டது என்பதுதான் மிக முக்கியமானது என்று அமெரிக்க மற்றும் தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)

# துயர் பகிர்கின்றோம்

யு.என்.எச்.சி.ஆர். திட்ட அதிகாரி

## கார்த்திகேசு சந்திரராசா

அவர்களின் அகாலமறைவினால் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

- கைதடி மேற்கு
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.

(14964)

# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை இரண்டாம் வருட சித்திர நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி இளமதி அவர்களின் தந்தையார்

## க.நடராஜா

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலைச்
சமூகத்தினர்.

*கோப்பாய்.* (14958)

# மரண அறிவித்தல்

## தம்பிமுத்து பூபாலசிங்கம்

(Ret. Hospital Secretary)

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து பூபாலசிங்கம் நேற்று (25.02.2003) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கௌத்துவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நுணாவில் தம்பிமுத்து - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான குமாரவேற்பிள்ளை - அரசரத்தினம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும் சிறீரஞ்சன் (பிரகாஸ் ஏஜென்சி, யாழ்ப்பாணம்), ரஞ்சினி (கனடா), ராஜினி (கனடா), சிவாஜினி (கொழும்பு), கலாஜினி (கனடா), மாலினி (ஜேர்மனி), சுகந்தன் (டென்மார்க்), ஜெயந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சரோஜினிதேவி , வேதநாயகம் (கனடா), ஈஸ்தரன்(கனடா), தர்மலிங்கம் (கனடா), பத்மராஜா (ஜேர்மனி), ரஞ்சினி (டென்மார்க்), நந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிர்மலா, சுரேகா, சுரேஜன் (கனடா), நிரோசன், நிஜாசன், சபீதா (தெல்லிப்பழை), நிஷா (கனடா), மிதுர்னா(கனடா), சௌமியா, அவினாஸ் (கனடா), வர்மியா, அஜீவ், சாயித்தியா (ஜேர்மனி), அபிராமி (டென்மார்க்), ரொபிக்கா, மொனிக்கா, ஜெனந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் வன்னியசிங்கம், இராசமணி, Dr.பரராஜசிங்கம் (நீர்கொழும்பு, கொச்சிக்கடை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், முத்துக்குமாரதாஸ் (Ret.Highwayes Department), காலஞ்சென்றவர்களான முருகதாஸ், ஜெயமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.02.2003) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ராஜ வில்லா",*
*கந்தரோடை, சுன்னாகம்.* (C/26702)

தகவல்: மு.முத்துக்குமாரதாஸ் (மைத்துனர்),
பூ.சிவாஜினி (மகள்).

# வீதி விபத்தில் வயோதிபர் காயம்!

வலி.வடக்கு,பெப்.26

சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் 84வயது வயோதிபர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சுன்னாகம் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையாக உள்ள மதவடி என்னும் இடத்தில் இவ்விபத்து இடம்பெற்றது.

சுன்னாகத்தைச் சேர்ந்த க.மார்க்கண்டு என்பவரே காயம் அடைந்த நிலையில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்மூலம் கொண்டுசெல்லப் பட்டவராவார்.

(ஒ-86)

# கோப்பாய் ஆலய சிவராத்திரி நிகழ்வு

கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டத்தாரால் கோப்பாய் வீரபத்திர சுவாமி கோயிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள சாந்திலிங்க சுவாமி கோயிலில் எதிர்வரும் முதலாம் திகதி சிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

விசேட நிகழ்வாக அன்று மாலை 2 மணியளவில் கோப்பாய் கற்பகப் பிள்ளையார் கோயிலில் இருந்து பாற்செம்பு எடுத்தலும் -

இரவு 4சாம அபிஷேக பூசைகளும், கருத்துரைகள், இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

(ஒ)

# யோகர்சன பயிற்சி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.26

இந்து சமய விவகார அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ள யோகாசனம் மற்றும தியான வகுப்புகள் எதிர்வரும் 27 ஆம் திகதி நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளன.

வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் மாலை 4 மணிமுதல் 5.30 மணிவரை இவ் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

(ஒ-8)

# மைதான வசதி இல்லாததால் பளை மாணவர்கள் சிரமம்

தென்மராட்சி,பெப்.26

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்கள் சீரமைக்கப்படாததால் மாணவர்கள் பயிற்சிபெற முடியாத நிலையிலுள்ளனர்.

பிரதேசத்தின் பாடசாலைகள் கடந்த மாதம் தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளன. ஆயினும், மைதானங்கள் துப்புரவு செய்யப்படவில்லை. இந்த நிலையில் பாடசாலைகள் அனைத்தும் முதலாம் தவணைக்கு முன்னர் வருடாந்த விளையாட்டுப போட்டிகளை நடத்த வேண்டுமென கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. ஆனால், பளை மாணவர்களுக்கு மைதான வசதி இல்லாததால் பயிற்சி பெறமுடியவில்லை.

ஆகவே, எளிமையாக விளையாட்டுப் போட்டிகளை நடத்தி முடிக்க எண்ணியுள்ளதாக பளைப் பிரதேச அதிபர்கள் தெரிவித்தனர். (ஒ-117)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கைதடி மேற்கு கிராம அலுவலர் J/293

## உயர்திரு.சுப்பிரமணியம் செல்வராசா

அவர்கள் கிராம அலுவலர் பதவி தரம் I இற்கு உயர்த்தப்பட்டமையையிட்டு உளம் பூரிப்படைந்த மக்கள், தம் இதய மலர்க் கொத்துகளால் பூந்துணர் புனைந்து வாழ்த்தியளிக்கும்

### வாழ்த்துமடல்

மக்கள் சேவையால் மரகத மணியாய்
துன்ப துயரம் களைந்த தாய் தீபச் சுடரொளி
அன்பு உன் இதயம் பண்பு உன் வாய்மொழி
இடர் களை கரங்கள் துயர் துடை கண்கள்
இத்தியாதியால் இதயங்கள் கலந்த
உத்தமச் செம்மலே உன் உயர் பதவி
மெத்தவே மெச்சி மேன்மை கொள வாழ்த்தியே
முத்துக் குமரன் நித்தம் அருள் செய
சித்தம் களி கூர்ந்து சிறப்புற வாழி! வாழி!!

பராசக்தி பாலர் பகல் இல்லம்,
கைதடி மேற்கு மாதர் கி.அ.வி.சங்கம்,
கைதடி மேற்கு சனசமூக நிலையம்,
கைதடி கிராம அபிவிருத்திச் சங்கம்,
குமரன் விளையாட்டுக் கழகம்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.* (14963)





சுடர் ஒளி

பெப்.25 - மார்ச் 03 இதழில்

- புலிகளுடன் சேர சிறுவர்கள் முயற்சி சிறுவரைத் தவிர்க்க புலிகள் உறுதி
- தமிழ்த் தேசிய இனத்தை விரோதிக்கும் இராணுவத்தின் குரோத மனப்பான்மை
- யாழ்.குடாநாட்டில் வளமிழந்த பூமிதான் எமது வருங்கால சந்ததியினருக்கு சீதனமா?
- வவுனியா என்றால் சாரதிகள் நடுக்கம்!
- நூல்கள் இல்லாத நூலகம் தமிழ் மக்களுக்கு அவசியமா?
- புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு வருடத்தில் சாதித்தது என்ன?

விலை 14/=

(C-26685)

# இனப்பெருக்க வரைவிலக்கணத்தை மாற்றியமைத்துவிட்ட குளோனிங் முறை

இ. இந்திரஜித்

பொதுவான நோக்கில் ஓர் அங்கியின் இனப்பெருக்க முறையானது இரு பிரிவுகளுக்குள் அடங்கிவிடும்.

அவ்விரு பிரிவுகளும்:-

1. இலிங்கமுறை மற்றும்
2. இலிங்கமில் முறை என்பன

வாகும்.

இவற்றிலே "குளோனிங்முறை" என்று உலகெங்கும் பரவலாக அடிபடும் அங்கிப் பெருக்க முறையானது இரண்டாவது பிரிவுக்குள்ளேயே அடக்கப்படுகிறது. அதாவது, ஆண், பெண இனச் சேர்க்கை இல்லாமலேயே ஓர் உடற் கலத்தில் இருந்து இன்னொரு வளமான எச்சத்தை உருவாக்கிக் கொள்ளுதலே குளோனிங்முறை எனப்படுகிறது.

முதன்முதலாக ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ரோஸலின்(Rosaline) என்னும் நிறுவனத்தில் 1995ஆம் ஆண்டு 'மெகான்' - 'மொரக்' என்ற இரு ஆடுகளின் ஆண்விந்தும், பெண் முட்டையும் மற்றொரு ஆட்டின் கருவறையில் வைத்து உருவாக்கப்பட்டன.

இவை இரண்டும் ஓர் ஆட்டின் கர்ப்பப்பையில் கிடந்த கருவிலிருந்து எடுக்கப்பட்ட கலங்கள்மூலம் உருவாக்கப்பட்டவை. ஆனால், பின்னர் உருவான 'டொலி' ஆடுதான் முதன் முதலில் ஓர் உடற்கலத்திலிருந்து உருவாக்கப்பட்டது. முதிராத கருவின் உடல் கலத்தை எடுத்து 'குளோனிங்' செய்வது பெரிய அதிசயமில்லை. ஏனெனில், அது ஒரு புதிய அங்கியாகப் பரிணமிப்பதற்கென்றே தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் கலமாகும். ஆனால், ஓர் உடற்கலம் இருக்கிறதே, அது வேறு கட்டமைப்பு, தொழிற்பாட்டுக் கைங்கரியங்களுக்கு படைக்கப்பட்டிருக்கிறது. அதைக் குளோனிங் செய்வதே ஆச்சரியமானது.

குளோனிங் செய்வதற்கு இரண்டு கலங்கள் பயன்படுகின்றன. ஒன்று வழங்குநர்கலம், மற்றையது பெறுநர் கலம். வழங்குநர் கலம்தான் குளோனிங் செய்யப்படவேண்டிய விலங்கின உடற்கலம். பெறுநர் கலமோ குறித்த இன பெண் விலங்கின் சூலகத்தில் இருந்து வெளியேறி இன்னும் கருவுறாத முட்டைக்கலம். இது கருவுற்று வளரத் தேவையான தூண்டலை வழங்கிய கணத்திலேயே நுகமாக மாறி வளரக்கூடியது.

மிகவும் சக்திவாய்ந்த நுணுக்குக காட்டியினால் முட்டைக் கலத்தை(பெறுநர்கலம்) அவதானித்து நுண்துளைக குழாய்மூலம் துளைத்து உள்ளே காணப்படும் பரம்பரை இயல்புக் காவிகளான டிஎன்ஏ.களைக் கொண்ட நிறமூர்த்தங்களை உறிஞ்சி எடுத்து விடுவார்கள், பின் வழங்குநர் கலமானது அதன் கருசகிதமாக முட்டைக் கலத்துடன் ஒட்டி பிணைய வைக்கப்படுகிறது. இப்படிச் செய்யப்பட்ட கூட்டுக் கலங்களில் சில தகுந்த செவிலித்தாயின் கருப்பையில் பதிக்கப்படும்போது உரிய விலங்கு குட்டியாக வளரத்தொடங்கும். இதன்போது கவனிக்கவேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், வழங்குநர் கலம் பிணைவு செய்யும்போது அதன மரபணுவானது உறங்கு நிலையில் இருததல் வேண்டும். தற்செயலாக டிஎன்ஏ. இரட்டித்தல், தடித்தல் போனற செயறபாடு மேற்கொண்டு இருக்குமெனில் கருக்கட்டல் என்பது சாத்தியமற்றதாகும். அதற்காக முதலில் வழங்குநர் கலம் தகுந்த வளர்ப்பூடகத்தில் வைத்து டி.என்.ஏ. உறங்கு நிலை செய்யப்பட்ட பின்னரே குளோன் செய்யப் பயன்படுத்தப்படுகிறது.


இயற்கையாக ஒரு முட்டையும், விந்தும் இணைந்து கருக்கட்டத் தயார் நிலையை அடைய எத்தனிக்கும் போது சிறயதொரு மின்தூண்டல பிறப்பிக்கப்படுவது வழமை. அது போலவே, குளோனிங் செய்முறையின் போதும் கலப் பிணைவின் போதும் சிறிய அளவில் மின் அதிர்ச்சியொன்று புறத்தேயிருந்து வழங்கப்படுகின்றது. மேலே கூறப்பட்ட குளோனிங் முறைதான் 'ரோஸ்லின் முன்மாதிரி' என உலகெங்கும் விளக்கப்படும் ஒரு வெற்றிகரமான திட்டமாகும்.

இம்முறையின்மூலம் பிறக்கும் குழந்தைகள் முற்று முழுதாக வழங்குநர் கலத்தின் உரிமையாளரின் இயல்பையே ஒத்திருந்தன. வாடகைக கர்ப்பப்பையின் சொந்தக்காரரின் இயல்பையோ பெறுநர் கலத்தின் இயல்பையோ கொண்டிருக்கவில்லை. இது பல முறைகள் பரிசோதிக்கப்பட்டு முடிவுசெய்யப்பட்டது.

ஒரு நல்ல இயல்பைப் பெற்றிருக்கும் விலங்கை குளோனிங் செய்வதன் மூலம் லாபம் பெற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக, மனிதக் காரணி9 (HUMAN FACTOR9) என்பது இரத்தம் உருவாதலைத் தூண்டும் ஒரு புரதம் இது குருதிச்சோகை நோயைக குணப்படுத்தப் பயன்படும் எனவே, இப்புரதத்தைக்கொண்ட ஓர் ஆட்டையோ அல்லது வேறு விலங்கையோ உருவாக்கிக்கொண்டால் குருதிச் சோகை நோயைக் குணப்படுத்துவது இலகுவாகிவிடும். இதற்காக வழங்குநர் கலத்திற்குள் முதலில் இப்புரததைதை உருவாக்கும் மரபணு புகுத்தப்பட்டு பின் குளோனிங் செய்யப்படுகிறது. இதன்மூலம் உருவாவது பெண் விலங்காக இருந்தால் அதன் பாலிலே புரதம் காணப்படும். இதன்மூலம் சுலபமான வழியில் அப்புரதத்தைப் பெறமுடியும். இத்தகையதொரு முறையையும் ரோஸ்லின் நிறுவனம் செய்தது. இதன்மூலம் ஆடு ஒன்று 1997இல் உருவாக்கப்பட்டது. இதன் பெயர் டொலி.

இதைவிட, இன்றைய அதிநவீன உலகில் அங்கமாற்று சிகிச்சை என்பது முக்கியமானதொரு விடயம். மனித குறைபாட்டு உள் அங்கங்களை அகற்றி வேறு விலங்கொன்றின் அங்கங்களை மனிதனுக்குப் பொருத்தும் வைத்தியமுறை. இதற்கு பன்றி பயன் படுகிறது. ஆனால், மனிதனின தீவிர மான சிந்தனை, உழைப்பு போன்ற வற்றால் இவை மனித உடலுடன் பொருந்தாது செயலிழந்து போகின்றன. இதற்குக் காரணம் தானம்செய்யும் விலங்கின் உறுப்புகளில் உள்ள 'X-Galactosis Transparase' எனும் நொதியம்தான். எனவே, இந்நொதி யம் நீக்கப்பட்ட கருக்களை குளோன் செய்து பன்றிகளை உருவாக்கிக் கொண்டால் மனிதனுக்கு வேண்டிய உள் உறுப்புகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆயினும், குளோனிங் முறைமூலம் ஒருவரைப் போலவே உருவமும், மரபுப் பண்புகளும் கொண்ட மற்றொருவரை உருவாக்க முடியுமேதவிர, ஒரே குணம் கொண்டவரை உருவாக்கிக்கொள்ள முடியாதென்பது குறிப்பிடத்தக்கது. ★




# ரூ. 13 கோடி செலவில் அபிவிருத்தித் திட்டங்கள்

## யு.என்.எச்.சி.ஆர். மேற்கொள்ளும்

வலிமேற்கு,பெப்.26

இந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில சுமார் 13 கோடி ரூபா மதிப்பீட்டில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

சுகாதாரம், நீர்விநியோகம், வீடமைப்பு, பொருளாதார அபிவிருத்தி போன்ற திட்டங்களுக்கே நிதி செலவிடப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இரண்டு சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு 30 லட்சம் ரூபாவும் பன்னிரண்டு சுகாதார நிலையங்களை திருத்தியமைப்பதற்கு 57 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் 48 இடங்களில் நடமாடும் சுகாதார சேவையினை மேற்கொள்வதற்கு 19 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் செலவிடப்படவுள்ளது. சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் 180 கிணறுகளை திருத்தி அமைப்பதற்கு 54 லட்சம் ரூபாவும், 200 குழாய்க் கிணறுகளை புதிதாக அமைப்பதற்கு 60 லட்சம் ரூபாவும் 15 குடிதண்ணீர்க் குழாய் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவும் 237 மலசல கூடங்களை புதிதாக அமைப்பதற்கு 35 லட்சத்து 55 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

600 வீடுகளை புதிதாக அமைப்பதற்கு 3 கோடி ரூபாவும் 400 வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கு 60 லட்சம் ரூபாவும் அவசர நடவடிக்கையாக 933 வீடுகளை அமைப்பதற்கு ஒரு கோடியே 39 லட்சத்து 95 ஆயிரம் ரூபாவும் சமூக அபிவிருத்திக்கு 15 பலநோக்கு மண்டபங்களை புதிதாக அமைப்பதற்கு 67 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் 191 மீனவர்களுக்கு கடன் வழங்குவதற்கு 19 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் 382 வியாபாரிகளுக்கு கடன் வழங்குவதற்கு 38 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் மூன்று ஆரம்ப பாடசாலைகளை அமைப்பதற்கு 15 லட்சம் ரூபாவும் செலவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச பிரிவுகளிலும் மேற்படி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (ஒ-175)

# வலி.தெற்கு மற்றும் தென்மேற்கில் தெருநாய்த் தொல்லை அதிகரிப்பு

வலிகாமம் தெற்கு,பெப்.26

வலிகாமம் தெற்கு மற்றும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகங்களுக்குட்பட்ட அநேக இடங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் தெற்கில் சுந்நரோடை, சுன்னாகம், உடுவில் போன்ற இடங்களிலும் வலிகாமம் தென்மேற்கு பிரிவில் மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய் போன்ற இடங்களிலும் தெருநாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இத்தெருநாய்களால் வீதிகளில் செல்லும் பாதசாரிகளுக்கும் மோட்டார் சைக்கிள், சைக்கிள் போன்றவற்றில் செல்பவர்களுக்கும் இடையூறுகள் விளைகின்றன.

இதேவேளை, தெருநாய்களை நஞ்சூட்டி அழிப்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்து பொது சுகாதார பரிசோதகர்கள் பணியில் ஈடுபட சென்ற போது பொதுமக்கள் தமது வீட்டு நாய்களைக் கட்டி வைக்காது இருந்துவிட்டு பொது சுகாதார பரிசோதகர்களை மிரட்டித் தாக்க முனைவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் தெருநாய்களின் தொல்லை அதிகரித்து இருப்பதால், அவற்றை அழித்தொழிக்கும் பணியை விரைவில் ஆரம்பிக்குமாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையினரிடம் கோரியுள்ளார்.

இதேவேளை -

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக யாழ்ப்பாணம் சுகாதார சேவைத் திணைக்களத்துக்கு நாய்களை அழிக்கும் மருந்துகள் வந்து சேரவில்லையென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-152)

# புனர்வாழ்வுக் கழகத்தால் கல்வயல் புனரமைக்கப்படும்

தென்மராட்சி,பெப்.26

சாவகச்சேரி கல்வயல் கிராமம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

யுத்தத்தினால் இக்கிராமம் முழுமையாகச் சேதமடைந்துள்ளதையடுத்து இதனைப் புனரமைக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முடிவு செய்துள்ளது.

இப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களை இனங்காண்பதற்கென குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரம், நீர்வழங்கல், விவசாயம், போசாக்கு, உட்கட்டமைப்பு ஆகிய திட்டங்களுக்கே குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்வயல் கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இக்குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டதாக இக்குழுக்களின் தலைவர் பி.சின்னத்துரை தெரிவித்தார். (ஒ-117)

# மிதிவெடி குறித்த கருத்தரங்கு

மல்லாகம்,பெப்.26

யுனிசெவ் ஆதரவில் சர்வோதயம் நடத்தும் மிதிவெடி அபாயக் கருத்தரங்கு ஒன்று குப்பிளான் கேணியடி வைரவர் கோவில் முன்றிலில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு நடைபெறவுள்ளது. மிதிவெடி அபாயங்களைத் தவிர்ப்பதற்குரிய அடிப்படை விளக்கங்கள் இக்கருத்தரங்கில் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன. குடாநாட்டில் அதிகமாக மிதிவெடிகள் கொண்ட பகுதிகளில் குப்பிளானும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# வேலையற்றோர் 650பேர் பதிவு

வலி.மேற்கு,பெப்.26

சங்கானைப் பிரதேச செயலகத்தில் சுமார் 650 இளைஞர், யுவதிகள் வேலையற்றோர்களுக்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

அண்மையில் சங்கானைப் பிரதேச செயலகத்தில் தொழில் திணைக்களத்தின் பிரதிநிதி, வேலை வங்கிப் படிவத்தை வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வழங்கி பதிவினை மேற்கொண்டார். (ஒ-175)

# மிதிவெடியால் பாதிக்கப்பட்டோர் குடும்பத்துக்கு உதவி

யாழ்குடாநாட்டில் மிதிவெடியினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு சர்வோதய அமைப்பினால் தொழில்சார் மற்றும் கல்விசார் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென 'யுனிசெவ்' நிறுவனம் 15 லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளதாக சர்வோதய அமைப்பின் யாழ்பிராந்திய அதிகாரி எஸ்.வி.சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் இப்பணம் முதற்கட்டமாக நூறு குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாகவும் - தொடர்ந்து மேலும் பல குடும்பங்களுக்கும் இந்த உதவி வழங்கப்படும் எனவும் -

அவர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# கொடிகாமம் - சுன்னாகம் இடையேயான பஸ் நேரம் மாற்றப்பட்டதால் அலுவலக ஊழியர்கள் சிரமம்

கொடிகாமத்திலிருந்து சுன்னாகம் செல்லும் 811 தடம் எண் பஸ் சேவையின் நேரம் திடீரென மாற்றப்பட்டதால் தென்மராட்சியில் உள்ள அலுவலகங்களில் கடமையாற்றுவோர் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தினமும் பிற்பகல் 4.30 மணிக்கு கொடிகாமத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த பஸ் சேவை, தற்போது சாவகச்சேரியிலிருந்து பிற்பகல் 4 மணிக்கு புறப்படுவதால் தென்மராட்சி அலுவலகங்களில் கடமையாற்றுவோர் இந்தப் பஸ்ஸில் பயணம் செய்ய முடியாமல் மாலை 6.30 மணி வரை காத்திருக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பளை, வரணி, கொடிகாமம், மீசாலை, சங்கத்தானை போன்ற இடங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் பஸ் சேவை நேரம் மாற்றப்பட்டுள்ளதால் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர். (ஒ-117)

# தமிழ்ப் பௌத்த மதகுருமார் வடபகுதியில் வாழ்ந்துள்ளனர்!

## மாதம்பாகம அஸ்ஸஜி தேரர் தெரிவிப்பு

வடபகுதியில் கடந்த காலங்களில தமிழ்ப் பௌத்த மதகுருமார்கள் வாழ்ந்துள்ளனர். அப்போது இந்து-பௌத்த் மக்களிடையிலான நல்லுறவும் காணப்பட்டது.

இவ்வாறு தெரிவித்தார் மதங்களுக்கிடையிலான சமாதான மன்றத்தின் தேசிய அமைப்பாளர் மாதம்பாகம அஸ்ஸஜி தேரர்.

நேற்றுமுன்தினம் மாலை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற சர்வமதகுருமாரின் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்நாட்டிலுள்ள மதத்தலைவர்கள் ஒன்றுகூடி யுத்தத்தை நிறுத்தி, சமாதானத்தை ஏற்படுத்த போதிய முயற்சி செய்யவில்லை. யுத்தத்தினால் நாம் எல்லோருமே பாதிக்கப்பட்டோம். இந்த நாட்டில் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ்வதற்காக நாம் அனைவரும் பாடுபடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

அங்கு உரையாற்றிய மௌலவி ஏ.எம்.எம்.காசிம் தெரிவித்ததாவது:-

இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் கடந்த 55 வருடங்களில் முரண்பாடுகள் நிறைந்த மக்கள் சமுதாயமும், அரசியல் வேறுபாடுகள் நிறைந்த தலைவர்களும், பொருளாதாரம் சீரழிக்கப்பட்ட நாடும், விழுமியமற்ற எதிர்கால சந்ததியுமே நாம் பெற்றுக்கொண்டவையாகும்.

இனியும் நாங்கள் இனமென்றும் மதமென்றும் பிளவுபட்டு நின்று நாட்டுக்குத் துரோகம் செய்யாது, ஒவ்வொருவரும், எம்மை சமாதானத்துக்காக அர்ப்பணிக்கத் தயாராவோம்- என்றார்.

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.வி.கே.சிவஞானம கூறியதாவது:-

அரசியல் ரீதியாக தனிநாடு கோரிய போராடிய புலிகளும், இலங்கை அரசும் சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்த பின்னரும் கூட ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற அமைப்புகள் சமாதான நடைமுறைகளுக்கு எதிர்க்கோஷம் எழுப்பி வருகின்றன. ஜனாதிபதியின் நிலைப்பாடும் தெளிவற்றதாகவே இருந்து வருகின்றது. இந்த நிலையில், வடபகுதி மக்களுக்கு சமாதானத்தின் பாலுள்ள உண்மையான ஈடுபாட்டை தென்பகுதியில் உள்ளவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும் என்றார். (ஒ-9)

### திருட்டு வழக்குகளில் இருவருக்கு ஒத்திவைப்புச் சிறை

வெவ்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட இருவர் தாம் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டதை அடுத்து இருவருக்கும் நீதிமன்றினால தலா 2 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6மாத கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் வீதி, ஒட்டுமடத்தைச் சேர்ந்த சிவலிங்கம் சசிகரன் என்பவருக்கு சொந்தமான ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான ஆட்டையும் 300 ரூபா [illegible] சமையல் பாத்திரத்தையும் திருடியதை ஒப்புக்கொண்ட யாழ்.அராலி வீதியைச் சேர்ந்த காராளசிங்கம் யசோதரன் என்பவருக்கும் - அரியாலையைச் சேர்ந்த முத்துசாமி முருகேஸ்வரனின் 10 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடியதை ஒப்புக்கொண்ட புதுக்குடியிருப்பு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பால்ராஜ் அன்ரனிதாஸ் என்பவருக்கும் யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா இத்தண்டனையை விதித்துள்ளார். (ஒ-10)


## கண்ணீர் அஞ்சலி

கிளி/தர்மக்கேணி-அ.த.க.பாடசாலையின் அதிபர்
திருமதி யோ.பாலேந்திரனின் அன்புத் தாயார்

### திருமதி கந்தையா இரத்தினம்

அவர்கள் 24-02-2003 அன்று காலமான செய்தி கேட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோட்டக்கல்வி அலுவலரும், அதிபர்களும்,
பளை கல்விக் கோட்டம், பளை.
(C/26706)



## வெற்றிகையுடன் பாராட்டுகின்றோம்



குப்பிழான் வடக்கு, தெற்கு (J/210, J/211) விவசாயிகள் சம்மேளனத்தை ஆரம்பித்து வைத்தவரும், கிராமத்தின் வளர்ச்சியில் அயராது உழைத்தவரும் குறிப்பாக பல்வேறு இடப்பெயர்வுகளில் பல இடர்களுக்கு முகம் கொடுத்து, பல சிரமங்களுக்கு மத்தியில் கிராமத்தின் தேவைகளை முன்னின்று நிறைவேற்றியவருமான கிராம சேவையாளர்

### திரு. செல்லத்துரை ஞானசபேசன்

(J/211- குப்பிழான் வடக்கு) அவர்கள் கிராம அலுவலர் தரம் Iஇற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை உவகையுடன் பாராட்டுகிறோம்.

வடக்கு,தெற்கு விவசாயிகள்
சம்மேளனமும், விவசாயிகளும்,
குப்பிழான்.

குப்பிழான் வடக்கு, தெற்கு
குப்பிழான். (14966)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



J/312 கிராம உத்தியோகத்தர்

### திரு.க.வாமதேவன் அவர்கள்

கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேன்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

த.திருவரன்,
யோ.ஜிலாந்தினி (மருமக்கள்).

66/8, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (14970)



## தரம் VI ஆங்கிலமொழி மூலம்

முன்னணி பாடசாலைகளில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில மொழிமூல வகுப்புகளுக்கு உங்களது பிள்ளைகளை வெற்றிகரமாக தமிழ்மொழி மூலத்திலிருந்து மாற்றி ஆங்கிலம் மூலமாகச் சிரமமின்றிக் கல்வி கற்பதற்கு எமது உதவிகளை அளிக்கின்றோம்.

02.03.2003 ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று பாடங்களும் ENGLISH LANGUAGE பாடத்தினையும் சேர்த்து வகுப்புகள் ஆரம்பிக்கின்றோம்.

01.03.2003 சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு முதலில் மாணவர்களின பெற்றோர்களுடன் கலந்துரையாடவிருக்கின்றோம். இவ்விடயம் தொடர்பாக ஈடுபாடுள்ள - நாட்டமுள்ள பெற்றோர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

விளம்பரதாரர்,
*677, பருத்தித்துறை வீதி, -*
*(PRO MOTERS நிறுவனம் முன்பாக) நல்லூர்.*
(14960)



## தவறிவிட்டது


தம்பிராசா சசிக்குமார் என்பவருடைய கடவுச் சீட்டு (Passport) அளவெட்டிக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் கறுப்பு நிறப்பையுடன் 02.02.2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

சிற்றி ரெக்ஸ்
123, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (14969)



## மேசைத் தொலைபேசி விற்பனைக்குண்டு





தொலைத் தொடர்பு நிலையங்கள், வீடுகள், அலுவலகங்கள் போன்றவற்றுக்கு பாவிக்கக்கூடிய முறையில் தொலைபேசிகள், இணைப்புக்கள் உடன் பெற்றுத்தரப்படும்.

உங்கள் தொடர்புகளுக்கு:
T.P. 071 399220

### பவர் செலுலர்

இல.183, கஸ்தூரியார் வீதி, முதலாம்மாடி, யாழ்ப்பாணம்
(14961)


# விளையாட்டு நிகழ்வுகள்

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற பிரதிஅதிபர் க.சிவராமலிங்கம பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ)

★ ★ ★

கோப்பாய்,பெப்.26

ஊரெழு கணேச வித்தியாலயம், ஊரெழு சீ.சீ.த.க. வித்தியாலயம் ஆகியவை இணைந்து நடத்தும் மெய்வன்மை போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இ.குலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கலந்துகொள்வார். (ஒ-72)

★ ★ ★

கோப்பாய்,பெப்.26

புத்தூர், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.தர்மரட்ணம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் கலந்துகொள்வார். (ஒ-72)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் க.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் சென். மேரிஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-51)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.26

வண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக நல்லூர் உதவிப் பிரதேச செயலர் இ.இரவீந்திர சர்மா கலந்துகொள்வார். (ஒ-5)

★ ★ ★

கொடிகாமம்,பெப்.26

அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி என் ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் கலந்துகொள்வார். (ஒ-74)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.26

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழுநிலை விளையாட்டுப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

முதலில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி தெனனகத்தாரகை விளையாட்டுக் கழகம் முதலிடத்தையும் சாவகச்சேரி யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தையும் பெற்றன. (ஒ117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.26

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் செ.குணபாலசிங்கம் கலந்துகொள்வார். (ஒ-5)

★ ★ ★

வலி.தெற்கு,பெப்.26

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டியும், நூலகத் திறப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-152)

### மோ.சைக்கிள்கள் மோதின

யாழ்ப்பாணம்,பெப்.26

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் ஒருவர் காலில் காயமடைந்தார்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அரியாலையைச் சேர்ந்த பீதாம்பரம் ஜெயவிந்தன் (வயது 28) என்பவரே காயமடைந்தவராவார். (ஜ-10)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான செல்வரஞ்சிதம்
அவர்களின் பாசமிகு தாயார்

### அமரர் திருமதி கந்தையா இரத்தினம்

அவர்கள் 24.02.2003 அன்று காலமான செய்தி கேட்டு எமது கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம். அன்னாரது குடும்பத்தினர்க்கு எமது அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம், பளை.
(C/26705)



## மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

மண்ணில் 20 - 08 - 1917



விண்ணில் 26 - 02 - 2000

### அமரர் அம்பலவாணர் இராசதுரை B.A. (LOND.)

*(முன்னாள் D.R.O. - திருகோணமலை,*
*இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி)*

"ஆண்டவனின் நித்திய இளைப்பாறுதலில் அமர்ந்திருக்கும் உங்களை அன்புடன் நினைவுகூரும்....

அன்பு மனைவி, மகன், மருமகள், பேர்த்தி, சதீஸ், மதீஸ்.

இல.880, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (14962)